விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 144 வள்ளுவர் ஆண்டு 2053 சித்திரை 29 வியாழக்கிழமை (12.05.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

# கொழும்பில் வீதியெங்கும் இராணுவம்; உலாவும் மக்களிடம் தீவிர விசாரணை





(கொழும்பு)

கொழும்பில் நேற்றுக் காலை முதல் வீதியெங்கும் இராணுவத்தினர் குவிக்கப்பட்டுப் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

ஊரடங்கு அமுலில் உள்ள நிலையில் வீதிகளில் செல்லும் மக்களிடம் அடையாள அட்டைகளை வாங்கிப் பார்வையிடும் இராணுவத்தினர், மக்கள் வெளியில் வந்தமைக்கான காரணத்தையும் கேட்டறிகின்றனர்.

அதேவேளை, மோட்டார்சைக்கிள் உள்ளிட்ட வாகனங்களில் வருபவர்களை இராணுவத்தினர் தீவிரமாக விசாரித்து வருகின்றனர். வாகனங்களையும் சோதனையிடுகின்றனர்.

இந் நிலையில், நேற்று காலை முதல் 15

## சஜித் தரப்புக்குள் காரசார மோதல்
### ஒருவர் வெளியேற்றம்

(கொழும்பு)

சுயாதீனமாக செயற்படத் தீர்மானித்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

நேற்று மாலை நடைபெற்ற கட்சிக் கூட்டத்தில் கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸவிடம் அவர் இத 15

## நிறைவேற்று அதிகாரத்தை
# ஒழிப்பதற்கு தயார்!
### நாட்டு மக்களுக்கான விசேட உரையில் ஜனாதிபதி

(கொழும்பு)

புதிய அரசாங்கத்துடன் கலந்துரையாடி நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதற்கு தயார் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

நாட்டு மக்களுக்கு நேற்றிரவு ஆற்றிய விசேட உரையின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)



## இராணுவ ஆட்சிக்கு வாய்ப்பே இல்லை
### கமால் குணரத்ன



(கொழும்பு)

இலங்கையில் இராணுவ ஆட்சிக்கான சாத்தியம் கிடையாது என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் கமால் குணரத்ன தெரிவித்தார். 15

## சில தொழிற்சங்கங்களின் பணிப் புறக்கணிப்பு நிறைவு
### ஆசிரியர் சங்க பணிப் புறக்கணிப்பு தொடர்கின்றது

(கொழும்பு)

நாளாவிய ரீதியில் தொழிற்சங்கங்கள் முன்னெடுத்துவரும் பணிப் புறக்கணிப்பை இன்றுடன் நிறைவுக்கு கொண்டுவர சில தொழிற்சங்கங்கள் தீர்மானித்துள்ளன.

தேசிய தொழிற்சங்க நிலையத்தின் அழைப்பாளர் வசந்த சமரசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

காலி முகத்திடலில் 15

## ஊரடங்குச் சட்டம்
### காலை 7 மணிக்கு தளர்த்தப்பட்டு மீண்டும் பிற்பகல் 2 மணிக்கு அமுல்

(கொழும்பு)

நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்கு சட்டம் இன்று காலை 7 மணிக்கு தளர்த்தப்பட்டு மீண்டும் பிற்பகல் 2 மணிக்கு அமுல்படுத்தப்படும்.

மேலும் வெள்ளிக்கிழமை காலை 6 மணிவரை ஊரடங்கு நடைமுறையில் இருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

### வன்முறையில் ஈடுபட்டால் கடும் நடவடிக்கை
## மக்கள் தேவையற்ற வகையில் வெளியில் வரவேண்டாம்
### இராணுவத் தளபதி சவேந்திர சில்வா



(கொழும்பு)


மக்களைத் தேவையற்ற வகையில் வெளியில் வரவேண்டாம் என்று பாதுகாப்புப் படைகளின் பிர 15

## ஜனாதிபதி பதவி விலகிய பின்னர் நாட்டை பொறுப்பேற்கத் தயார்
### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)

நாட்டு மக்களின் கோரிக்கைக்கு அமைவாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகும்வரை எந்தவொரு பொறுப்பையும் ஏற்றுக்கொள்வதற்கு நாம் தயாரில்லை. அவர் பதவி விலகியவுடன் நாட்டைப் பொறுப்பேற்றுக்கொண்டு, சுபீட்சத்தை அடைந்துகொள்வதற்கு அவசியமான நடவடிக்கை 15

## பிரதமராகிறார் ரணில்?
### ஜனாதிபதி கோட்டாவுடன் அவசர சந்திப்பு




(கொழும்பு)

அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் முன்னாள் பிரதமரும் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று இரவு இடம்பெற்ற 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்க்கட்சித் தலைவருடன் சீனத்தூதுவர் திடீர் சந்திப்பு

## அசாதாரண நிலை தொடர்பில் கலந்துரையாடல்



(கொழும்பு)

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள அசாதாரண நிலைமைக்கு மத்தியிலும் இலங்கைக்கான சீனத் தூதுவர் சி சென் ஹொங்கிற்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவிற்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று எதிர்க்கட்சித்தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன் போது இலங்கையின் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டதாக எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இந்த அனர்த்தமான தருணத்தில் இலங்கைக்கு சகோதரத்துவக் கரம் நீட்ட வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சீனத் தூதுவரிடம் கோரிக்கை விடுத்துள்ளார். வெளிப்படைத் தன்மையுடன் நாட்டை நிர்வகித்தல், இலஞ்சம், ஊழல், அட்க்குமுறைகளை ஒழிப்பது என்பனவே தனது நிர்வாகத்தில் முதன்மையானதாக இருக்கும் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

இலங்கையின் தற்போதைய நிலையிலிருந்து மீள்வதற்கு சீனாவின் பெருந்தன்மையான ஆதரவு மிகவும் அவசியமானது எனத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், இதற்கு தூதுவரை தலையிடுமாறு கோரிக்கை விடுத்துள்ளார். (ம)

---


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின்
ஆசிரியர்
திருமதி **பிருந்தா சதீஸ்குமார்**
அவர்களின் பாசமிகு மாமியார்

**திருமதி**
**தர்மகுலசிங்கம் சாந்தகுமாரி**

அவர்களின் இழப்பால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினர்க்கு
ஆழ்ந்த அனுதாபத்தை
தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

மலர்வு : 18.06.1961
உதிர்வு : 09.05.2022

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(C-4311)

ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/கல்வியங்காடு இந்து தமிழ்க் கலவன் பாடசாலை


---


## மரண அறிவித்தல்

மலர்வு 27 - 12 - 1929



உதிர்வு 08 - 05 - 2022

### தம்பிமுத்து நாகலிங்கம்

அரியாலையைப் பிறப்பிடமாகவும் ரொறண்டோ கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிமுத்து நாகலிங்கம் அவர்கள் கடந்த 08.05.2022 (ஞாயிற்றுக்கிழமை) அன்று கனடாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கா. தம்பிமுத்து - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும் காலஞ்சென்ற செல்லப்பா - தையல்முத்து தம்பதியரின் அன்பு மருமகனும் நாகலோசனியம்மாவின் ஆருயிர்க் கணவரும் ஜதீந்திரா, ஸ்ரீந்திரா, தர்மேந்திரா, விக்கினேந்திரா, யசிந்தா ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் ஜனனி, சுபாஷினி, மேரிகிறிஷ்டினா, தர்சினி, பாலச்சந்திரா ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற நல்லதம்பி மற்றும் Dr. சீவரத்தினம், சபாரத்தினம், செல்வரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் பரமேஸ்வரி, சுந்தரேஸ்வரி, கமலாதேவி, ராஜேஸ்வரி, காலஞ்சென்றவர்களான தனலெட்சுமி, தங்கரத்தினம், பரமநாதன் மற்றும் மகாலெட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும் அனித்தா - டாசில்வா, அஜந், அஞ்சலன், நீல் பிரசன்னா, சுவாதி, வருணன், விதுசன், வெனுசா - நிரோஜன், தபீசன், கெவிந், லக்சியா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் எதிர்வரும் 15.05.2022 (ஞாயிற்றுக் கிழமை) பிற்பகல் கனடாவில் நடைபெற்று ஹைகில்ஸ் ஒன்றோறியோ மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

Dr. த. சீவரத்தினம் - 021 790 0360
த. சபாரத்தினம் - 077 336 4928
த. செல்வரத்தினம் - 077 345 9476

(11348)

தகவல் : சகோதரர்கள்


---


## கண்ணீர் அஞ்சலி



அரியாலை கிழக்கு கோப்பர்குளம்
ஸ்ரீ துரவடிப் பிள்ளையார் ஆலய
முன்னாள் முகாமையாளரும் தற்போதைய
போஷகருமான

**தம்பிமுத்து நாகலிங்கம்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும்
அன்னாரின் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மண்ணில் : 27.12.1929
விண்ணில் : 08.05.2022

(11349)

நிர்வாகம்
ஸ்ரீ துரவடிப் பிள்ளையார் ஆலயம்


---


## கண்ணீர் அஞ்சலி



மண்டைதீவு 06 ஆம் வட்டாரத்தைப்
பிறப்பிடமாகவும் வில்சன் வீதி,
திருவையாறை வதிவிடமாகவும் கொண்ட

**அமரர்**
**சோமசுந்தரம் சரவணபவன்**

மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தின்
தலைவரும் இல்லக் குழந்தைகளின் தந்தையுமான
உயர்திரு. **சரவணபவன் மோகனபவன்**
அவர்களின் தந்தையின் இவ்வுலகப் பிரிவினால்
யாம் ஆழ்ந்த துயருற்றுள்ளோம்.

தோற்றம் : 16.01.1936
மறைவு : 10.05.2022

அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனை வேண்டிக் கொள்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(C-4312)

பிரிவால் துயருறும் : பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
இல்லக் குழந்தைகள் - மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்


---


## கண்ணீர் அஞ்சலி



வடக்கு மாகாண சுகாதாரத் திட்டமிடல்
பணிப்பாளர் திரு. ச.மோகனபவன்
அவர்களின் அன்புத் தந்தையார்

**அமரர்**
**சோமசுந்தரம் சரவணபவன்**
(மண்டைதீவு 6ஆம் வட்டாரம்)

அவர்களின் மரணச் செய்தி அறிந்து
ஆழ்ந்த துயர் அடைவதுடன் அன்னாரின்
இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்
துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

வலம்புரி நிர்வாகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழன் வீரத்திற்கு தலைவணங்கு

## கவிப்பேரரசு வைரமுத்து டுவிட்

(சென்னை)

சர்வதேச ரீதியில் இன்று இலங்கை பேசுபொருளாக மாறியுள்ளது.

மக்கள் புரட்சியும் அரசியல் குழப்பமும் இலங்கை பற்றிய செய்தியை உலகத்தின் மூலை முடுக்கெல்லாம் கொண்டு சென்றிருக்கின்றது.

அதேசமயம், கடந்த 2009 ஆம் ஆண்டு இதே மாதத்தில் இலங்கையில் நடைபெற்ற இறுதிக் கட்ட யுத்தத்தின் கோரத்தினையும் உலகம் இன்று நினைவு கூர்ந்து கொண்டிருக்கின்றது.

அதை அறிந்த உலகத்தார் இலங்கை ஆட்சியாளர்களை வசை பாடாமல் தவிர்த்தால் தான் ஆச்சர்யம்.

இது இவ்வாறு இருக்க இந்திய சினிமாவில் மிகப்பெரிய கவிஞரான கவிப்பேரரசு வைரமுத்து தற்போதைய இலங்கைப் பிரச்சினை தொடர்பில் அவரது டுவிட்டர் தளத்தில் பதிவொன்றை இட்டுள்ளார். அதில்,



வைரமுத்து
@Vairamuthu

நான்கு பக்கம்
மரணம் சூழ்ந்த போதும்
'தாயகம் பிரியேன்
தாய்மண்ணில் மரிப்பேன்' என்ற
பிரபாகரத் தமிழனின்
பேராண்மை எங்கே...

ஊர் கொந்தளித்த
ஒரே மாதத்தில்
நாடு கடக்கத் துடிக்கும்
ராஜபக்ஷ எங்கே...

ஓ
சர்வதேச சமூகமே!
இப்போதேனும்
தமிழன் வீரத்திற்குத்
தலை வணங்கு

எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-6)



# முன்னாள் அமைச்சர்களின் வீடுகளுக்குள் அள்ள அள்ள வரும் அத்தியாவசியப் பொருட்கள்

## மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட பின் வீடுகளுக்கு தீ வைப்பு

(கொழும்பு)

**நாட்டில் மிகவும் தட்டுப்பாடான அத்தியாவசியப் பொருட்கள் முன்னாள் அமைச்சர்களின் வீடுகளில் பெருமளவில் சிக்கியுள்ளன.**

அதன்படி முன்னாள் அமைச்சர்களான சமல் ராஜபக்ஷ, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, வடமத்திய மாகாண ஆளுநர் மஹிபால ஹேரத், குருநாகல் மேயர் துஷார சஞ்சீவ மற்றும் குருநாகல் பிரதேச சபையின் தலைவர் அச்சல நிமந்த ஆகியோரின் வீடுகளில் மறைத்து வைக்கப்பட்ட பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இரசாயன் உரங்கள், எரிவாயு சிலிண்டர்கள், டீசல் மற்றும் பருப்பு வகைகளே இவ்வாறு மீட்கப்பட்டன.

முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, குருநாகல் மேயர் துஷார சஞ்சீவ மற்றும் குருநாகல் பிரதேச சபையின் தலைவர் அச்சல நிமந்த ஆகியோரின் வீடுகளில் இருந்து 12.5 கிலோகிராம் எடையுள்ள 140 எரிவாயு சிலிண்டர்களும் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவின் குருநாகல் லேக் வீதியிலுள்ள வீட்டில் மட்டும் 80க்கும் மேற்பட்ட லாப்ஸ் எரிவாயு சிலிண்டர்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் திஸ்ஸமஹாராம, கிரிந்த மாகம பிரதேசத்தில் அமைந்துள்ள முன்னாள் அமைச்சர் சமல் ராஜபக்ஷவுக்கு சொந்தமான வீட்டை முற்றுகையிட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள், 300 யூரியா உர மூட்டைகள், 3000 லீற்றர் டீசல், 200 நெல் மூட்டைகள் மற்றும் சிவப்பு பருப்பு மூட்டைகள் போன்றவற்றை எடுத்து அப்பிரதேச மக்களுக்கு விநியோகித்த பின்னரே வீட்டிற்கு தீ வைத்துள்ளனர்.

வட மத்திய மாகாண ஆளுநர் மஹிபால ஹேரத்தின் திம்புலாகல பந்தனகலவில் உள்ள 50 ஏக்கர் பண்ணையில் அமைக்கப்பட்டுள்ள களஞ்சிய அறையில் சுமார் 400 மூட்டைகள் யூரியா உரம் மற்றுறொரு இரசாயன உரங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவை விவசாயிகளால் கைப்பற்றப்பட்டன.

நாட்டில் உரம், எரிபொருள், எரிவாயு என்பனவற்றுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில், நீண்ட வரிசையில் மக்கள் காத்திருக்கின்றனர். ஆட்சியில் இருந்த இவர்களின் வீடுகளில் பெருந்தொகைப் பொருட்கள் மீட் கப்பட்டமையால் மக்கள் மேலும் கொதிப்படைந்துள்ளனர். (நி-6)

# லிட்ரோ எரிவாயு லொறிகள் நிறுத்தப்படும் முற்றம் தீக்கிரை



(கொழும்பு)

கேகாலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் முன்னாள் அமைச்சர் கனக ஹேரத்தின் வீடு மற்றும் லிட்ரோ எரிவாயு லொறிகள் நிறுத்தப்படும் முற்றத்திற்கு இனந்தெரியாத சிலர் தீ வைத்துள்ளனர்.

இந்த தீ வைப்பு காரணமாக வீட்டுக்கும் மஹிபால ஹேரத்திற்குச் சொந்தமான எரிவாயு லொறி முற்றத்திற்கும் கடுமையான சேதம் ஏற்பட்டுள்ளது.

மூன்று எரிவாயு லொறிகளுக்கு தீ வைக்கப்பட்டுள்ள நிலையில், அங்கிருந்த எரிவாயு சிலிண்டர்களும் சேதமாக்கப்பட்டுள்ளன.

கேகாலை மொலமுரே மாவத்தையில் அமைந்துள்ள கனக ஹேரத்தின் வீட்டின் மீது தீ வைக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் கேகாலை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (நி-6)

# யோஷிதவுக்கு சொந்தமான உணவகம் தீக்கிரை



(கொழும்பு)

சிங்கராஜ வனப் பகுதியில் அமைந்துள்ள யோஷித ராஜபக்ஷவிற்குச் சொந்தமானதாகக் கூறப்படும் உணவகம் போராட்டக்காரர்களால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

உணவகம் பற்றி எரியும் காணொளியும் சமூக வலைத்தளங்களில் வெளியாகியுள்ளது.

அரசாங்கத்திற்கு எதிராக நாடு முழுவதும் வன்முறை வெடித்துள்ள நிலையில், அரசாங்கத்திற்கு ஆதரவானவர்கள் மீது கடும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட அரசாங்கத்தின் முக்கிய உறுப்பினர்களின் வீடுகள் தொடர்ச்சியாக தீ வைத்து எரிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வங்கிகளுக்கிடையிலான துடுப்பாட்ட சுற்றுப்போட்டி





சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகத்தின் ஏற்பாட்டில் வங்கிகளுக்கு இடையிலான 5 பந்துப் பரிமாற்றம் கொண்ட விலகல் முறையிலான துடுப்பாட்ட சுற்றுப்போட்டி அண்மையில் ஆரம்பமானது.

இதன் இறுதிப்போட்டிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகத் தலைவர் ந.தேவரூபன் தலைமையில் இடம் பெற்றது.

எட்டு வங்கிகள் பங்குபற்றிய துடுப்பாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியில் இலங்கை வங்கியை 18 ஓட்டங்களால் தேசிய சேமிப்பு வங்கி வெற்றி கொண்டது.

அத்துடன் இரண்டாம் இடத்தை இலங்கை வங்கியும், மூன்றாம் இடத்தை மக்கள் வங்கியும் தமதாக்கிக் கொண்டன .

சுன்னாகம் இலங்கை வங்கி, யாழ்ப்பாணம் செலான் வங்கி, கிருபா லேணர்ஸ், கஜா விருந்தினர் விடுதி, சுன்னாகம் கொமர்ஷல் வங்கி ஆகியவற்றின் அனுசரணையுடன் இடம்பெற்ற கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டியில் பிரதம விருந்தினராக ரோட்டரிக் கழக மாவட்ட உதவி ஆளுநர் ரோட்டரியன் ந.சுகந்தன், விசேட விருந்தினராக இலங்கை வங்கியின் உதவிப் பொது முகாமையாளர். ப.சிவானந்தன், கௌரவ விருந்தினர்களாக சுன்னாகம் இலங்கை வங்கி முகாமையாளர் புவனேந்திர ராஜா, செலான் வங்கி யாழ்ப்பாணக் கிளை முகாமையாளர் குனேந்திரன், சுன்னாகம் கொமர்ஷல் வங்கி நிறைவேற்று உத்தியோகத்தர் பு.சயந்தன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (4-6-30)

# பிளேஓப் சுற்றுக்குள் சென்றது குஜராத்



இந்தியன் ப்ரீமியர் லீக் தொடரில், லக்னோவ் சுப்பர் ஜயன்ட்ஸ் அணியுடன் நேற்று முன்தினம் இடம் பெற்ற போட்டியில், குஜராத் டைட்டன்ஸ் அணி, 62 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய குஜராத் டைட்டன்ஸ் அணி, 20 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 144 ஓட்டங்களைப் பெற்றது.

பின்னர், 145 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலளித்தாடிய லக்னோவ் சுப்பர் ஜயன்ட்ஸ் அணி, 13.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 82 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக்கொண்டது.

இப்போட்டியில் பெற்றுக்கொண்ட வெற்றியை அடுத்து குஜராத் டைட்டன்ஸ் முதல் அணியாக பிளே ஓப் சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது. (4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2613

**தாரணி**

சும்மா இருக்கும் போதெல்லாம் ஒரு கால் கூட வராது...



சார்ஜ் போட்டுட்டோ, சைலண்டலயோ போட்டுட்டு அப்புறம் போய் பார்த்தா 19 மிஸ்ட்கோல் இருக்கும்.

**கிருசாந்**

ஒரு காலத்தில் நாம் கடைக்கு சென்று வர பயன்படுத்திய வாகனம்...



**மதன்**

நாடு போற போக்கைப் பார்த்தா இனி மிச்சச் சாப்பாடும் வைக்க மாட்டாங்கள் போல இருக்கே



**குருபரன்**

அண்ணே, நூல் எழுதுறவங்களை நூலாசிரியர்னு சொல்றாங்க, கதை எழுதுறவங்களை கதையாசிரியர்னு சொல்றாங்க...



இந்த பெயர் எழுதுறங்களை பேரோசிரியர்னு சொல்வாங்களா?

**தினேஸ்**

எப்படி துவங்கியதோ... அப்படியே முடிகின்றது வாழ்க்கை...



**யாழினி**

அம்மாவின் சமையலில் குறை இருப்பினும் காட்டிக் கொள்ளாதே...



ஏனெனில் சிலருக்கு அம்மா இல்லை, பலருக்கு உணவே இல்லை.!

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7 மணித்தியாலங்கள் மின்வெட்டு?

(கொழும்பு)

**ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டதன் பின்னர் மின்சாரத் தேவை அதிகரிக்கும் என்பதால் தற்போதைய மின்வெட்டு சுமார் ஏழு மணித்தியாலங்களாக நீடிக்கப்படும் அபாயம் உள்ளதாக இலங்கை மின்சார சபை பொறியியலாளர்கள் சங்கத்தின் இணைச் செயலாளர் எரங்க குடா ஹேவா தெரிவித்துள்ளார்.**

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு அவர் இதனை தெரிவித்தார்.

எரிபொருள் நெருக்கடியால் ஏற்பட்ட மின்வெட்டு இன்னும் தீர்க்கப்படவில்லை.

வெளிநாடுகளில் இருந்து அவ்வப்போது கொண்டு வரப்படும் எரிபொருட்கள் மூலம் இப்பிரச்சினைக்கு தற்காலிகத் தீர்வுகள் கிடைத்தாலும் நிரந்தரத் தீர்வு தற்போது வரை எட்டப்படவில்லை. (நி-6)

## இலங்கையில் சமாதானம் நிலவ இந்தியாவில் மணல் சிற்பம்




(சென்னை)

இந்தியாவின் பிரபல மணல் சிற்பக்கலைஞரான சுதர்சன் பட்நாயக் என்பவர் இலங்கையில் சமாதானத்தை வலியுறுத்தி மணலில் சிற்பம் ஒன்றை செதுக்கியுள்ளார்.

குறித்த மணல் ஓவியம் அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளது. (நி-6)

## திட்டமிட்டவாறு பரீட்சைகள் நடைபெறும் பரீட்சைகள் ஆணையாளர்

(கொழும்பு)

க.பொ.த சாதாரண தரப் பரீட்சைகளை ஒத்திவைக்க எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

அதன்படி, பரீட்சைகள் 23 ஆம் திகதி ஆரம்பமாகுமென அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-6)

## சஜித் பிரதமரானால் ஆதரவளிக்க தயார் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி


(கொழும்பு)

சஜித் பிரேமதாஸ ஆட்சியைப் பொறுப்பேற்றால் அதற்கு ஆதரவளிக்கத் தயார் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

மகாசங்கத்தினருடனான கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர இதனைத் தெரிவித்தார்.

இதேவேளை, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகினால் மாத்திரமே, சஜித் பிரேமதாஸ பிரதமர் பதவியை ஏற்பாரென பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார். (நி-6)

## நஸீர் அஹமட்டின் காரியாலயம் தீக்கிரை



(ஏறாவூர்)

ஏறாவூரிலுள்ள முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான நஸீர் அஹமட்டின் காரியாலயம் நேற்று முன்தினம் மக்களால் தீயிட்டு கொளுத்தப்பட்டுள்ளது. (நி-6)

## இராசிபலன்

12.05.2022
சித்திரை 29, வியாழக்கிழமை
ஏகாதசி பிற்பகல் 3.51 மணிவரை

உத்தரம் பிற்பகல் 4.49 மணிவரை
சுபநேரம் -7.24- 8.54 மணிவரை
இராகுகாலம் -1.24- 2.54 மணிவரை

ஏகாதசி விரதம்
சந்திராஷ்டமம்
சதயம்

வளவன்



தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், மற்றவர்களின் மனநிலையை அறிந்து செயற்படுவீர்கள், தேகநலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.



புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கலாம், பொருளாதார நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.



பணப்புழக்கம் அதிகமானாலும் அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள், நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும்.



மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும் குறை சொல்லுபவர்கள் பாராட்டும் நாள், வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள், தித்திக்கும் பயணங்கள் இடம் பெறலாம்.



அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.



புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், இல்லம்தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம்.



தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும்.



பொறுமையாக இருந்து காரியம் சாதிக்க வேண்டிய நாள், நீங்கள் நல்லவர் என நினைத்த ஒருவரே உங்களுக்கு விரோதமாக செயற்படலாம், ரோக பயமுண்டு.



பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள்.



வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், விரும்பிய உணவுப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.



குடும்பத்தில் ஒற்றுமை கூடும், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம்.



நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, வழிபாடு விருப்பத்தை நிறைவேற்றும், நட்புவட்டம் விரிவடையும் நாள், காரிய அனுகூலமுண்டு.

கோபப்படாமல் இருந்துவிட்டால் கோமாளியாக்கிவிடுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி பதவி விலகினாலே மக்கள் புரட்சி முடிவுக்கு வரும்

## செல்வம் எம்.பி.



(மன்னார்)

**ஜனாதிபதி இராஜினாமா செய்ய வேண்டும்.அப்போது தான் நாட்டில் ஏற்பட்டுள்ள மக்கள் புரட்சி யை முடிவுக்கு கொண்டு வர முடியும் என பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.**

மன்னாரில் நேற்று அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்

மகிந்த ராஜபக்ஷ மற்றும் ஜனாதிபதி ஆகியோர் காலம் கடந்து முடிவுகள் எடுப்பது தவறு.மக்கள் விரும்பவில்லை என்றால் அவர்கள் தமது பதவிகளை விட்டுச் செல்ல வேண்டும் என்பதே காலத்தின் நீதி. பிரச்சினைகளை ஏற்படுத்தி இன முறுகலை தூண்டி விட்டு இழப்புக்களை சந்தித்த பின்பு தமது பதவிகளை இராஜினாமா செய்வது என்பது முட்டாள் தனம் நாடு மிகவும் கொந்தளிப்பான நிலையில் இருந்து கொண்டு இருக்கின்றது. சிங்கள தேசத்தில் போராட்ட வடிவில் பல விடயங்கள் நிகழ்ந்து கொண்டு இருக்கின்றன. மகிந்த ராஜபக்ஷவின் ஆரம்ப பிரச்சினையே இன்று பாரிய அளவில் வெடித்துள்ளது. பொருளாதார பிரச்சினை பின்தங்கிய நிலையிலே இவ்வாறான ஒரு சூழலை உருவாக்கி மகிந்த ராஜபக்.ஜனாதிபதி கோட்டா பய ராஜபக்ஷ மற்றும் அவருடைய அரசாங்கம் மிக மோச மான ஒரு சூழலை உருவாக்கி உள்ளது என்பதை பார்க்கும் போது இது ஒரு கண்டனத்திற்குரிய விடயமாக உள்ளது.

வடக்கு கிழக்கில் உள்ள தமிழ் மக்கள் மிக அவதானமாக இருக்க வேண்டும். எங்களுடைய பங்களிப்பு குறித்த விடயங்களில் இருக்கின்ற போது விடுதலைப்புலிகளை காரணம் காட்டி திசை திருப்பு கிற கெட்டித்தனம் இந்த அரசாங் கத்திடம் இருக்கின்றது. விடு தலைப்புலிகளை க்ரணம் காட்டி சிங்கள மக்களை திசை திருப்புகின்ற ஒரு நிலையை அவர்கள் ஏற்படு த்துவதற்கு நாங்கள் அனும திக்கக் கூடாது எனத் தெரி வித்தார். (4-6-285)

# கொன்று புதைக்கப்பட்டவரின் சடலம் தோண்டி எடுப்பு

(கரணவாய்)

வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணிப் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவரை அவரின் மனைவியும் இன்னொருவருமாக இணைந்து கொலை செய்து புதைக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து நேற்று புதன்கிழமை கிளிநொச்சி நீதிவான் முன்னிலையில் அப்பகுதி தோண்டப்பட்ட போது அக் குடும்பஸ்தர் புதைகுழியில் இருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

மேற்படி குடும்பஸ்தர் கடந்த திங்கட்கிழமை கொலை செய்யப்பட்டு அருகில் உள்ள காணியில் புதைக்கப்பட்டுள்ளதாக மருதங்கேணிப் பொலிஸாருக்கு இரகசிய தகவல் ஒன்று கிடைக்கப்பெற்றது.

இதனைத் தொடர்ந்து பொலிஸார் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை குறித்த பகுதிக்குச் சென்று புதைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் இடத்தை அடையாளப்படுத்தியுள்ளனர். நேற்று புதன்கிழமை கிளிநொச்சி நீதிமன்ற உத்தரவு பெறப்பட்டு கிளிநொச்சி நீதிவான் ஸ்மைல் ஜெமில் , சட்ட மருத்துவ அதிகாரி, தடயவியல் பொலிஸார் முன்னிலையில் காலை அப்பகுதி தோண்டப்பட்ட போது கால்கள் கட்டப்பட்ட நிலையில் குடும்பஸ்தர் சடலமாக மீட்கப்பட்டார். இது தொடர்பில் மருதங்கே ணிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(4-6-33-60-64-104-316)

# வினைத்திறமை காண் தடைப்பரீட்சை பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணம் பொதுச் சேவையின் அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் III இல் கடமையாற்றும் அலுவலர்களு க்கான வினைத்திறமை காண் தடைப் பரீட்சை 2018 (I) 2022 ஆனது நாளை மறுதினம் 14 ஆம் திகதி சனிக்கிழமை வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக் குழுவினால் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் தவிர்க்க முடியாத காரணங்களின் அடிப்படையில் மறுஅறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் சி. திருவாகரன் அறிவித்துள்ளார். (4-6)

# மருத்துவர்கள், தாதியர்கள் கிளிநொச்சியில் போராட்டம்



(முறிகண்டி)

கிளிநொச்சி மருத்துவமனை மருத்துவர்கள், தாதியர்கள் தாதியர்கள் நேற்று போராட்டத் தில் ஈடுபட்டனர்.

மருத்துவமனை வளாகத்தில் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் A9 வீதியில் கவனயீர்ப்பு போராட்டமாக முன்னெடுக்கப் பட்டது.

தமது தொழிற்சங்க நடவடிக்கையை மக்கள் நலன் கருதி இன்று (நேற்று) கைவிடுவதாகவும், வன்முறைக்கு வன்முறை தீர்வாகாது என்பதால் அமைதியாக நாட்டு மக்கள் போராட வேண்டும் என தெரிவித்தனர். (4-6-100-316)

# மணவாளக்கோல உற்சவம்

(குப்பிழான்)

அல்வாய் கிழக்கு வெள்ளிருவை ஞானவைரவர் ஆலய வருடாந்த மணவாளக் கோல உற்சவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ன கும்பாபிஷேக, விசேட பூசை வழி பாடுகளுடன் ஆரம்பமானது. தொடர்ந்தும் 11 தினங்கள் இடம்பெறவுள்ள இவ்வாலய உற்சவத்தில் எதிர்வரும்-21 ஆம் திகதி சனிக்கிழமை காலை-08 மணிக்கு வைரவப் பெருமானுக்கு நவோத்திர சகஸ்ர(1009) சங்காபிஷேகமும், மாலை-06 மணிக்கு மூலஸ்தான பூசையுடன் வசந்தமண்டப பூசையும், திருவூஞ்சலும் இடம்பெற்று வைரவப் பெருமான் திருவீதி உலா வரும் காட்சியும் நடைபெறும். (4-6-18)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இருபாலை தெற்கு அருள்மிகு கற்பக விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவ பெருவிழா இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 நாட்கள் நடைபெறும். இவ் மஹோற்சவத்தில் எதிர்வரும் 26 ஆம் திகதி வியாழக் கிழமை தேர்த் திருவிழாவும், மறுநாள் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன. (4-6-316)

# சாவகச்சேரியில் உழவியந்திரம் மோதி ஒருவர் படுகாயம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர்ப்பகுதியில் நேற்று புதன்கி ழமை காலை கழிவகற்றும் உழவியந்திரத்துடன் மோதி ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

துவிச்சக்கரவண் டியில் சென்ற சாவகச்சேரி- உதயசூரியன் பகுதியைச் சேர்ந்த 38 வயதான நபர் ஒருவரே இவ்வாறு உழவியந்திரத்துடன் மோதி படுகாயமடைந்த நிலை யில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். குறித்த விபத்துத் தொடர் பான மேலதிக விசா ரணை களை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-6-30)



தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் கடந்த திங்கட்கிழமை கணித ஆசிரியர்களான V.குகநாதன், S.V. பாலமுரளி ஆகியோரால் எழுதப்பட்ட சுயமாகக் கற்கக்கூடிய தரம் 6-11 வரையான கணித பாட நூல்கள் யா/கம்பர்மலை வித்தியாலயம், யா/கெருடாவில் இ.த.க.பாடசாலை, யா/தொண்டைமானாறு வீரகத்தி மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலை மாணவர்களுக்கு சந்நிதியான் ஆச்சிரம மோகன் சுவாமிகள் தலைமையில் இலவசமாக வழங்கி வைக்கப்பட்டன.

# வீதியால் நடந்து சென்ற பெண்ணின் சங்கிலி அறுப்பு

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தாளையடி அம்மன் கோவிலடிப் பகுதியில் நேற்று புதன்கிழமை காலை வீதியால் நடந்து கடைக்குச் சென்ற பெண் ஒருவரின் ஒன்றரைப் பவுண் சங்கிலியை மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அறுத்துக் கொண்டு தப்பித்துச் சென்றுள்ளனர்.அத்துடன் குறித்த பெண்ணின் கைப்பையினையும் பறித் துக்கொண்டு சென்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பாக குறித்த பெண் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்ததை அடுத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (4-6-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடைக்கால அரசாங்கத்தை பொறுப்பேற்க தயார்

## அநுரகுமார தெரிவிப்பு

(கொழும்பு)

**பொதுத்தேர்தல் இடம்பெறும் வரை தேசிய மக்கள் சக்தி தலைமையிலான இடைக்கால அரசாங்கத்தை பொறுப்பேற்க தயார் என அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

தேசிய மக்கள் சக்தியின் விசேட ஊடகவியலாளர் சந்திப்பொன்று நேற்று புதன்கிழமை இடம்பெற்றது.

இதன்போதே கட்சியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவியில் இருக்கும் வரை நாட்டில் ஸ்திரத்தன்மை நிலவாது என்றும் அவர் பதவி விலக வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

"கோட்டா கோ கம" போராட்டத்தை தவிர்த்து ஏனைய பகுதிகளில் இடம்பெறும் வன்முறை, கொள்ளை மற்றும் தனிப்பட்ட பழிவாங்கல் குறித்து துரித தீர்மானத்தை முன்னெடுக்காவிடின் பாரதூரமான விளைவுகள் ஏற்படும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

மேலும் நெருக்கடி நிலையில் இருந்து மீள்வதற்கான குறுகிய மற்றும் நீண்டகால திட்ட யோசனைகளை பாராளுமன்றில் முன்வைக்க தீர்மானித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.


1. தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உடனடியாக பதவி விலக வேண்டும்.

2. தற்போது அமைச்சர் இல்லாத பட்சத்தில், சபாநாயகர் செயல் தலைவராக செயற்படுவார்.

3. தற்போதைய அரசாங்கமும் தற்போதைய பாராளுமன்றத்தின் அமைப்பும் மக்கள் ஆணையை பிரதிநிதித்துவப்படுத்தாது என்பதால் தற்போதைய பாராளுமன்றத்தில் எந்த மாற்றத்தையும் மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதால் புதிய ஆணையுடன் ஆறு மாதங்களுக்குள் புதிய அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும்.

4. இதற்கிடையில் தற்காலிக ஆட்சி அமைப்பாக உடனடியாக தேர்தலுக்கு செல்ல முடியாத பட்சத்தில் நாட்டை புதிய பாதையில் கொண்டு செல்லும் பொறுப்பை ஏற்க தேசிய மக்கள் சக்தி தயாராக உள்ளது என அவர் தெரிவித்தார். (நி-6)

# கறுப்புப்பட்டி அணிந்து சுகாதார பணியாளர்கள் எதிர்ப்பு



(கொழும்பு)

அமைதியான போராட்டத்திற்கு எதிரான அரச பயங்கரவாதத்தை வன்மையாக கண்டிப்பதாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், அனைத்து சுகாதாரப் பணியாளர்களும் கறுப்புப்பட்டி அணிந்து பணிக்கு வருகை தருவார்கள் என தெரிவித்துள்ளது. (நி-6)

# பொதுமக்களால் தாக்கப்பட்ட பேருந்தை அப்புறப்படுத்திய இளைஞர்கள்

(கொழும்பு)

மகரகம - வத்தேகெதர பிரதேசத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆதரவாளர்கள் பயணித்த பேருந்து ஒன்று பொதுமக்களின் தாக்குதலினால் அழிக்கப்பட்டுள்ளது.

அதனை அகற்றுவதற்கு அப்பகுதியில் உள்ள இளைஞர்கள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

எனினும், முன்னதாக குறித்த பேருந்தை அங்கிருந்து அகற்றுவதற்கு இடமளிக்கமாட்டோம் என அவர்கள் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: மகம் 4
கி.பா: சூரி 8 செவ் 4 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:HND in QS (கட்டார்)
எதிர்பார்ப்பு: தகுந்த அரச. தனியார் உத்தியோகம்
தொ.இ: B/12635

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம் : பூராடம் 3
கி.பா: 29 சூரி 11 செவ் 9 இல்
உயரம்:5'5"
தகைமை/தொழில்: BSc in IT Software Engineer (சிங்கப்பூர்)
எதிர்பார்ப்பு: படித்த அழகிய மணமகள்
தொ.இ: B/12638

பிறப்பு: 1991 கிறிஸ்தவம் RC
நட்சத்திரம்: ஆயிலியம் 2
கி.பா: சூரி 5 செவ் 7 இல்
உயரம்:5'11"
தகைமை/தொழில்: HND Software Engineer Computer Control Clerk
எதிர்பார்ப்பு: அரச.தனியார் உத்தியோகம் எந்த மதத்தவரும் ஏற்றுக்கொள்ளப்படும்
தொ.இ: B/12639

பிறப்பு: 1999 இந்து
நட்சத்திரம்: உத்தரம் 3
கி.பா: சூரி 6 செவ் 8 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: O/L மலேசியா
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
தொ.இ: B/12640

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1998 கிறிஸ்தவம் RC
நட்சத்திரம்: உத்திராடம் 4
கி.பா: சூரி, செவ் 11 இல்
உயரம்: 155 cm
தகைமை/தொழில்: உயர்தரம் கணித பிரிவு
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/12680

பிறப்பு:1995 இந்து
நட்சத்திரம்:சதயம் 4
கி.பா: 24 சூரி 9 செவ் 12 இல்
உயரம்: 161 cm
தகைமை/தொழில்: BSc (Hons) Information Technology Instructor Faculty of Engineering
எதிர்பார்ப்பு: உயர்பதவி அரச பல்கலைக் கழகத்தில் படித்த தனியார் தொழில்
தொ.இ:G/12681

பிறப்பு: 1996 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி 3
கி.பா: சூரி, செவ் 2 இல் உயரம்: 5'4"
தகைமை/தொழில்: Bsc in Green Technology
எதிர்பார்ப்பு: உயர்பதவி அரச உயர் உத்தியோகம்
தொ.இ:G/12683

பிறப்பு: 1997 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: சூரி 9 செவ் 2 இல்
உயரம் : 161 cm
தகைமை/தொழில் :BBA Final year
எதிர்பார்ப்பு: பட்டதாரி காரைநகர் விரும்பத்தக்கது
தொ.இ:G/12687

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


# இராணுவ பிரசன்னம் தொடர்பில் அமெரிக்கா அதிருப்தி

(கொழும்பு)

மக்களுடைய அன்றாட வாழ்க்கையில் இராணுவ பிரசன்னத்தை ஈடுபடுத்தியமை தொடர்பில் அமெரிக்கா கவனம் செலுத்தியுள்ளது.

அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் நெட் பிறைஸ் இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்துள்ளார்.

அமைதியான ஆர்ப்பாட்டங்களை கட்டுப்படுத்துவதற்காக, இராணுவத்தை ஈடுபடுத்துகின்றமை தொடர்பில் மிகவும் அதிருப்தியடைந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இலங்கையில் தற்போது நடைபெறுகின்ற வன்முறைச் செயற்பாடுகள் தொடர்பில் அதிருப்தி அடைவதாகவும் சுட்டிக் காட்டியுள்ளார்.

வன்முறையில் ஈடுபடுகின்ற அனைவரும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (நி-6)

# அரசியல் நடவடிக்கைகளுக்காக பேருந்துகள் வழங்கப்படாது

(கொழும்பு)

அரசியல் நடவடிக்கைகளுக்காக தனியார் பேருந்துகளை இனி வழங்குவதில்லை என தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை தனியார் பேருந்து சங்க சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் அஞ்சன பிரியஞ்சித் தெரிவித்தார்.

தனியார் பேருந்து உரிமையாளர்கள் அலரிமாளிகையில் நடத்தப்படும் நிகழ்வுகளில் கலந்துகொள்வதற்காக வாடகை அடிப்படையிலும் சிலர் தனிப்பட்ட இலாப நோக்கத்திற்காகவும் இவ்வாறு பேருந்துகளை வழங்கி இருந்ததாக அவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், எதிர்காலத்தில் அரசியல் நடவடிக்கைகளுக்காக தனியார் பேருந்துகளை வழங்குவதில்லை என்று தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளர்களால் காலிமுகத்திடலில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தைத் தொடர்ந்து கொழும்பிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களில் 20 இற்கும் மேற்பட்ட தனியார் பேருந்துகளுக்கு தீ வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 43

# தாய் தந்தையை நேசியுங்கள்



அமெரிக்காவில் மிகப்பெரிய பணக்காரர் ஒருவர். தன் அம்மாவின் பிறந்தநாளுக்கு பரிசளிக்க ஒரு பெரிய கடையின் முன், தன் காரை நிறுத்தினார்.பிரபலமான பூக்கடை அது, எவ்வளவு விலை சேர் இது 250 டொலர்! இதைவிட அருமையான 'பூ 'காண்பிக்க முடியுமா?

வந்தவர் மிகப்பெரிய பணக்காரர் என கடைக்காரருக்கு தெரிகிறது

இது "ஆர்கிட்" வகைப் பூ மிகஅருமையா இருக்கும். ஒரு வாரம் வரை வாடாது.

"500 டொலர்"! சரி, இதையே , பொதி செய்யுங்கள்

உங்களிடம், "கொரியர்" சர்வீஸ் இருக்கா?

கொரியர் சர்வீஸ்சும், செய்கிறோம் அதற்கு ஒரு 100 டொலராகும்.

வேண்டாம் இந்த பூங்கொத்து இன்று என் தாயிடம் போய் சேர வேண்டும் இன்று என் தாயின் பிறந்தநாள் கொரியர் சர்வீஸ்' பல காரணங்களுக்காக தாமதமாகலாம் எனக்கு இன்றே போகணும்.

ஒன்று செய்யுங்க ஒரு காரையும் வாகன சாரதியையும், ஏற்பாடு செய்து இந்த பூங்கொத்தை.இன்றே என் அம்மாவிடம், இந்த விலாசத்திற்கு அனுப்பிவிடுங்கோ.

ஒக்கே சேர், இப்பவே ஏற்பாடு செய்கிறேன் இன்றே போய் சேர்ந்துவிடும். அதற்கும் சேர்த்து 500 டொலர். பணத்தையும், அம்மாவின், வீட்டு விலாசம் கொடுத்து விட்டு நகர்ந்தார் அந்தப் பணக்காரர். மனம் முழுக்க மகிழ்ச்சி, தன் பிஸி நேரத்திலும், தன் அம்மாவின் பிறந்தநாளை மறக்காமல், பூங்கொத்து அனுப்பி விடுகிறோம் என சந்தோஷத்துடன் காரில் ஏறப்போக.

ஒரு ஐந்து ஆறு வயது மிக்க சிறுமி அழுதபடி இருந்தாள். குழந்தை ஏன் அழுகிறாய் எனக் கேட்க அங்கிள், எனக்கு ஒரு டொலர் பணம் தர முடியுமா?

ஓக்கே, ஒரு டொலர் தானே தாரேன் எதற்குப் பணம்? ஏன் அழுகிறாய்? ஏதாவது தொலைத்து விட்டாயா? இல்லை அங்கிள் எங்க அம்மாவின் பிறந்தநாள் இன்று நான் வருடா, வருடம் அம்மாவின் பிறந்தநாளுக்கு, அம்மாவுக்கு பிடித்த ஒரு ரோஜா பூ வாங்கித் தருவேன் என்று அம்மாவின் பிறந்தநாள் என்னிடம் பணம் இல்லை. நீங்க ஒரு டொலர் கொடுத்தால் ஒரு ரோஜா பூ வாங்கி அம்மாவிற்கு கொடுப்பேன்.

அம்மா எனக்காக பார்த்துக் கொண்டிருப்பார் அங்கிள் ஒரு டொலர் தரமுடியுமா?

ஒரு டொலர் என்னமா! 10 டொலர் தாரேன் எடுத்துக்கோ வேண்டாம் அங்கிள், ஒரே ஒரு டொலர் போதும். என ஒரு டொலரை மட்டும் எடுத்துக்கொண்டு 'சிட்'டாக பறந்தாள் அச் சிறுமி.ஏதோ சொக்லேட் வாங்க தான் அப்படி ஒரு டொலர் கேட்கிறாளோ? என நினைத்து அந்த பணக்காரர் மெதுவாக காரை அவள் செல்லும் இடம் நோக்கிச் செலுத்த சொன்னார் வாகன சாரதியிடம்.

ஒரு சின்ன பூக்கடையில் ஒரு டொலர் கொடுத்து வாங்கிய ஒரு சிகப்பு ரோஜா பூவை கடைக்காரர் அதை அழகாக பொதி செய்து கொடுக்கிறார்.

மிகுந்த சந்தோஷத்துடன், அச்சிறுமி பூ வை எடுத்தபடி ஓட. அச் சிறுமி எங்கு போகிறாள்? எந்த வீடு? தாய் யார்? என அறிய சாரதியிடம் காரை சிறுமியின் பின்னால் போக சொல்லுகிறார். சிறுமி, பல தெருக்களைக் கடந்து ஓடுகிறாள். அவளுக்கு தெரியாமல் அவளைப் பின் தொடர்கிறது கார் பல வளைவுகளை, தெருக்களை கடந்து, ஓடும் அவள் போய் நிற்கும் இடம் சமாதி. ஒரு கல்லறையின் அருகில் போய் நின்று, ரோஜா பூவை வைத்து. "அம்மா, 'பிறந்த நாள் வாழ்த்துக்கள்' உனக்கு மிகப் பிடித்த ரோஜா பூ நான் வாங்கிட்டு வந்துட்டேன் மா. என கூறி அம்மாவின் கல்லறையில் வணங்கி. முத்தமிட்டதைப் பார்த்துக்கொண்டிருந்த பணக்காரரின் கண்களில் இருந்து நீர் சுரந்தது .

சேர் , மீட்டிங்கிற்கு நேரமாச்சு சாரதி அவசரப்படுத்த, கண்ணை துடைத்த படி அவசர அவசரமாக காரில் ஏறி, கடைக்கு போய், தான் வாங்கி வைத்த பூங்கொத்தை, எடுத்துக்கொண்டு வண்டியை, வீட்டிற்கு போகச் சொன்னார்.

பெரிய கார், தன் வீட்டின் முன் நிற்பதை பார்த்த 92 வயதுடைய தாய் கண்ணை சுருக்கி, யாரது? என்ன பார்க்க, அம்மா என அழைத்தபடி பூங்கொத்தை கொடுத்து, பிறந்தநாள் வாழ்த்துக்கள் அம்மா என காலில் விழுந்து, மகனை ஆரத் தழுவிய அம்மா உனக்கு இருக்கும் வேலையில், ஏம்பா நீ வந்தே.அம்மா, அன்பை எப்படி வெளிப் படுத்துவது, என ஒரு சிறுமியிடம் நான் கற்றேன்.

உயிரோடு இல்லாத தன் தாய்க்கு அச் சிறுமி எப்படி பூங்கொத்தை கொடுத்து அன்பை வெளிப்படுத்தினாள். நெகிழ்ந்து விட்டேன் ஆனால் நான்? அச் சிறுமியின் மூலமாக அன்பை, எப்படி வெளிப் படுத்துவது என அறிந்தேன்.

உயிரோடு இருக்கும், என் தாய்க்கு நேரில் வந்து பார்த்து வாழ்த்தி, அம்மாவின் வாழ்த்தை பெறுவதை விட பெரும் பாக்கியம் எனக்கு ஏது? மகனை கட்டி அணைத்து முத்தமிட்டாள் அந்த அம்மா.

தாய், தந்தை இருப்பவர்கள். அவர்களுக்கு கொடுக்கும் மரியாதையை, அன்பை வாரி வழங்க தவறாதீர்கள். அன்பை வெளிப்படுத்த மறக்காதீர்கள்.

உங்களின்பண்பின், அன்பை நினைத்து, மகிழ்ந்து ஒரு சொட்டு கண்ணீர் உங்கள் தாயின் கண்களில் இருந்து வந்தால்.. உங்கள் வாழ்க்கை சிறக்கும்.

எல்லா தாய்க்கும் தன் பிள்ளைகளின் மகிழ்ச்சி, உயர்வு என்றும் சந்தோஷம்.

சந்தோஷத்தில் மகிழ்ச்சியில், எல்லா தாயின் கண்களிலும் ஆனந்த கண்ணீர் தான் சுரக்கும்.

# மகாராணி எலிசபெத் ஓய்வு பெறத் தீர்மானம்

(லண்டன்)

96 வயதுடைய லண்டன் மகாராணி எலிசபெத் தனது பணியில் இருந்து ஓய்வு பெற உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

வயது முதிர்ச்சி காரணமாக தனது பணிகளை அவர் சிரமத்துடன் மேற்கொண்டு வருவதால் இந்த ஓய்வு அவசியம் எனக்கருதப்படுகிறது.

ஆட்சிப் பொறுப்பிற்கான அடுத்த பணிச் சுமைகளை சிறிதுசிறிதாக



இளவரசர் சார்லஸ் உடன் பகிர்ந்து வருவதாகவும் அறியப்பட்டுள்ளது. (நி-6)

# பில்கேட்ஸிற்கு கொரோனா தொற்று



(வோஷிங்டன்)

உலகலாவிய ரீதியில் கொரோனாத் தொற்று பாதிப்பு சற்று குறைவடைந்து வரும் நிலையில் உலகின் பெரும் பணக்காரர்களில் ஒருவருமான மைக்ரோ சாப்ட் இணை நிறுவனருமான பில் கேட்ஸ்சிற்கு கொரோனாத் தொற்று பாதிப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.இதுதொடர்பில் மைக்ரோ சாப்ட் இணை நிறுவனருமான பில்கே ட்ஸ் வெளியிட்ட ட்விட்டர் பதிவில்,

"லேசான காய்ச்சல் அறி குறியுடன் உள்ள எனக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதனால் மருத்துவர்களின் ஆலோசனைப்படி என் உடல் நிலை தேறும் வரை என்னை தனிமைப்படுத்திக் கொள்கிறேன்" என்று பதிவிட்டுள்ளார். (நி-6)

# உக்ரைனுக்கு மேல 40 பில்லியன் டொல

## அமெரிக்க பிரதிநிதிகள் சபை ஒப்புதல்

(வோஷிங்டன்)

உக்ரைனுக்கு மேலதிக மாக 40 பில்லியன் டொலர் உதவியை வழங்க அமெரிக்க பிரதிநிதிகள் சபை ஒப்புதல் அளித்துள்ளது.

ரஷ்யாவின் மூன்று மாத காலப் படையெடுப்பை முறியடிக்க அதிக நிதி தேவை என ஜனாதிபதி ஜோ பைடன் அழைப்பு விடுத்ததை அடுத்து இந்த அங்கீகாரம் கிடைத்துள்ளது.

அதன்படி நேற்று முன்தினம்

# அமெரிக்காவில் வறண்டு வரும் ஏரியில் கண்டெடுக்கப்படும் மனித உடல்கள்

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் வேகமாக சுருங்கி வரும் மீட் ஏரியில் அடுத்தடுத்து மனித உடல்கள் கண்டெடுக்கப்படும் சம்பவம் அங்கு அதிர்வலைகளை ஏற்படுத்தி வருகிறது.

அமெரிக்காவின் மிகப்பெரிய நீர்தேக்கமான மீட் ஏரியில், கடந்த 2000 ஆம் ஆண்டு முதல் நீர்மட்டம் தொடர்ந்து குறைந்து வருகிறது. இதற்கிடையில் காலநிலை மாற்றம் நிலைமையை தொடர்ந்து மோசமாக்கி வருவதால் மீட் ஏரி முற்றிலுமாக வறண்டு போகும் நிலைக்கு வந்துள்ளது.

இந்த நிலையில் வேகமாக சுருங்கி வரும் மீட் ஏரியில் அடுத்தடுத்து மனித உடல்கள் கண்டெடுக்கப்படும் சம்பவம் அங்கு அதிர்வலைகளை ஏற்படுத்தி வருகிறது. கடந்த 1 ஆம் திகதி முதன்முறையாக ஏரியின் கரையோரத்தில் சேற்றில் சிக்கிய பீப்பாய் ஒன்றில் ஒரு உடல் கண்டெடுக்கப்பட்டது.

இந்த உடல் 1970 அல்லது

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நீண்ட போருக்கு தயாராகும் ரஷ்யா

## அமெரிக்க உளவுத்துறை எச்சரிக்கை

(வோஷிங்டன்)

**உக்ரைனில் ஒரு நீண்ட போருக்கு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தயாராகி வருகிறார் என அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளது.**



கிழக்கில் வெற்றி பெற்றாலும் போரை முடிவுக்குக் கொண்டுவர முடியாது என அமெரிக்க உளவுத்துறை எச்சரித்துள்ளது.

உக்ரைனின் கிழக்குப் பகுதியில் கடுமையான மோதல் நீடித்து வரும் அதேவேளை ரஷ்யாவும் தனது பகுதியை கைப்பற்ற முயற்சித்து வரும் நிலையில் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

உக்ரேன் அதன் தலைநகரான கீவ்வை கைப்பற்றும் முயற்சிகளை எதிர்த்ததை அடுத்து, டான்பாஸ் பகுதியைக் கைப்பற்றும் முயற்சியில் ரஷ்யா ஈடுபட்டுள்ளது.

இந்நிலையில் பணவீக்கம், உணவுப் பற்றாக்குறை மற்றும் எரிபொருள் விலைகள் அதிகரித்தால், உக்ரைனுக்கு அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றிய ஆதரவு பலவீனமடையும் என்ற தவறான எண்ணத்தை ரஷ்ய ஜனாதிபதி கொண்டுள்ளதாகவும் அமெரிக்க உளவுத்துறை தெரிவித்துள்ளது. (நி-6)

## ரஷ்யா கைப்பற்றிய நகரங்களை மீட்ட உக்ரைன் வீரர்கள்

(கீவ்)

கருங்கடல் பகுதியான ஒடேசா நகர் மீதும் ரஷ்யா தனது பார்வையை திருப்பி உள்ளது. அந்த நகர் மீது ரஷ்யா ஏவுகணை தாக்குதலை நடத்தி வருகிறது.

உக்ரைன் மீது ரஷ்யப்படைகள் தாக்குதல் தொடங்கி 10 வாரங்களை தாண்டிவிட்டது. ஆனாலும் இன்னும் போர் முடிவுக்கு வரவில்லை. உக்ரைனுக்கு அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் ஆதரவுக் கரம் நீட்டி வருவதாலும், ஆயுதங்கள் உதவி செய்து வருவதாலும் ரஷ்ய வீரர்களை எதிர்த்து உக்ரைன் வீரர்கள் ஆக்ரோஷத்துடன் போராடி வருகின்றனர்.

இதனால் ரஷ்யா தான் நினைத்தப்படி உக்ரைனை கைப்பற்ற முடியாமல் தவித்து வருகிறது. இந்தப் போரில் இரு தரப்பிலும் ஏராளமான வீரர்களும், அப்பாவிப் பொது மக்களும் பலியாகிவிட்டனர், இலட்சக்கணக்கானவர்கள் அங்கிருந்து வெளியேறி[illegible]



உக்ரைன் நகரங்கள் அனைத்தும் சின்னாபின்னமாகிவிட்டன. ரஷ்யப் படைகள் மும்முனை தாக்குதலில் ஈடுபட்டு உள்ளன. குடியிருப்புக் கட்டடங்கள் மீது சரமாரியாக குண்டுகளை வீசி வருகிறது. இதனால் கட்டடங்கள் அனைத்தும் முழுமையாக சேதம் அடைந்து எலும்புக் கூடுகளாக காட்சி அளிக்கிறது.

உக்ரைனில் சிறந்த துறைமுக நகராக திகழ்ந்து வரும் மரியுபோல் நகரை [illegible] அறிவித்தது. அங்குள்ள 100 கிலோ மீற்றர் பரப்பளவில் சுரங்க அறைகள் நிறைந்த இரும்பாலைக்குள் ஏராளமான பொதுமக்கள் உயிருக்குப் பயந்து பதுங்கி இருந்தனர் ஐ.நா.பாதுகாப்பு உதவியுடன் பொதுமக்கள் அனைவரும் வெளியேற்றப்பட்டனர்.

இதையடுத்து அங்கு தற்போது உச்சக்கட்டபோர் நடந்து வருகிறது. இரும்பாலை பதுங்கு குழியில் ஆயிரம் உக்ரைன் வீரர்கள் பதுங்கி உள்ளனர். இதனை தகர்க்க ரஷ்யா முடிவு செய்து உள்ளது. இரும்பாலையை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர ரஷ்யா மும்முரமாக தாக்குதலில் ஈடுபட்டு உள்ளது.

கருங்கடல் பகுதியான ஒடேசா நகர் மீதும் ரஷ்யா தனது பார்வையை திருப்பி உள்ளது. அந்த நகர் மீது ஏவுகணை தாக்குதலை ரஷ்யா நடத்தி வருகிறது. அங்கும் கடுமையான சண்டை நடந்துவருகிறது.

கார்கிவ் அருகே வடக்கு மற்றும் வடகிழக்கில் உள்ள சில நகரங்களை ரஷ்யப்படைகள் கைப்பற்றி இருந்தது. இந்தப் பகுதிகளை கடும் போராட்டத்திற்கு பிறகு மீண்டும் கைப்பற்றி விட்டதாக உக்ரைன் தெரிவித்து உள்ளது.

இந்நிலையில் உக்ரைன் போரில் அறிவிக்கப்பட்டவர்களை விட அதிகமானவர்கள் பலியாகி இருப்பதாக ஐ.நா. பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்து உள்ளது. (நி-6)

## ...லதிகமாக ...லர் உதவி

இடம்பெற்ற வாக்கெடுப்பில் உக்ரைன் சட்டமூலத்திற்கு ஆதரவாக 368 வாக்குகளும் எதிராக 57 வாக்குகளும் கிடைத்தன.

அந்தவகையில் ஏப்ரல் மாதத்தில் அமெரிக்க ஜனாதிபதி ஜோபைடன் விடுத்த கோரிக்கையை விட அதிகமாக வழங்க இணக்கம் தெரிவித்துள்ளது. (நி-6)

80 களில் சுட்டுக்கொல்லப்பட்ட ஒருவருடையது என்று விசாரணையில் தெரியவந்துள்ளது. இந்த நிலையில் அந்த உடல் கண்டெடுக்கப்பட்ட ஒரு வாரத்துக்கு பின்பு மீட் ஏரியில் இருந்து மேலும் பல மனித உடல்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எனினும் இதுபற்றிய கூடுதல் தகவல்களை அதிகாரிகள் வழங்காத நிலையில், ஏரி முழுமையாக வறண்டு போகும்போது மேலும் பல உடல்கள் கண்டெடுக்கப்படலாம் என்று பொலிஸார் எச்சரித்துள்ளனர். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈடுசெய்ய முடியாத பேராசிரியர் சந்திரசேகரம்பிள்ளை பாலகுமார் அவர்களின் இழப்பு

## மறைந்தார் மாண்பு



யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திற்கும் மருத்துவ பீடத்திற்கும் உயிரியில் இரசாயனவியல் துறைக்கும் உரிமையுடனும் அர்ப்பணிப்புடனும் பணியாற்றிய நேர்மையான ஓர் கல்வியியலாளரான பேராசிரியர் சந்திரசேகரம்பிள்ளை பாலகுமார் அவர்களை நாம் இன்று இழந்து விட்டோம். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தின் பட்டதாரியான இவர் மருத்துவ பீட உயிர் இரசாயனவியல் துறையில் முதுதத்துவமாணி பட்டதாரி மாணவனாக தனது பயணத்தை ஆரம்பித்து பின்னர் விரிவுரையாளராக, பேராசிரியராக மட்டுமன்றி மருத்துவ பீடாதிபதியாகவும் உச்ச நிலையடைந்து தனது கற்றல் மற்றும் கற்பித்தலுடன் மட்டும் நின்றுவிடாது ஆராய்ச்சி மற்றும் நிர்வாகப் பணிகளுடன் மாணவர்களுக்கும் எமது சமூகத்திற்கும் பல்பரிமாணங்களில் அளப்பரிய பணிகளையும் ஆற்றி வந்த பேராசிரியர் பாலகுமார் 36 வருடங்கள் எமது துறையினதும் பீடத்தினதும் ஒட்டுமொத்த பல்கலைக்கழகத்தினதும் வளர்ச்சிக்குப் பல்வேறு வழிகளில் தனது பங்களிப்பை வழங்கியுள்ள பாலாவின் பெயர் எல்லோர் மனதிலும் நீங்காத இடத்தைப் பிடித்து விட்டது.

**பல்கலைக்கழகத்தில் பாலாவின் பிரசன்னம்:** முன்னாள் பீடாதிபதியும் உயிர் இரசாயனவியல் பேராசிரியருமான காலம்சென்ற பேராசிரியர் பாலசுப்பிரமணியத்துடனும் என்னுடனும் இணைந்து பல்வேறு ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொண்ட பாலா நாட்டின் சூழ்நிலை மற்றும் அவரது குடும்ப கடமைகள் காரணமாக யாழ்ப்பாணத்தில் தங்க முடிவெடுத்து தனது கலாநிதிப்பட்ட ஆய்வினை எமது பல்கலைக் கழகத்திலேயே மிகவும் சிறந்த முறையில் பூர்த்தி செய்தார். பல்வேறு இக்கட்டான மற்றும் சவால் நிறைந்த காலப்பகுதிகளில் பணியாற்றுவதற்கு பொருத்தமான புத்திசாலித்தனமான மென்திறன் கொண்ட ஒரு கல்வியியலாளராக தன்னை உருவாக்கி உலகம் அறிந்த ஓர் ஆய்வாளராக தன்னை வெளிப்படுத்தியதுடன் அதில் வெற்றியும் கண்டுள்ள பாலா 2019 இலிருந்து பேராசிரியராகவும் தனது தகைமையை உயர்த்திக் கொண்டார்.

**சிறந்த விரிவுரையாளராக:** பாலா இப் பல்கலைக்கழகத்தில் மருத்துவ மாணவர்களுக்கு மட்டுமன்றி இணைந்த சுகாதார அலகு சித்த மருத்துவ கலைப்பீடத்தில் மனைப்பொருளியல் விவசாய பீடத்தில் விவசாய இரசாயனவியல் சிறப்பு உடற்கல்வி எனப் பல தரப்பட்ட மாணவர்களுக்குக் கற்பித்தல் பணிகளை ஆற்றி வந்ததுடன் பல்வேறு தொழில்நுட்ப ரீதியான தேர்வுக் குழுக்களில் முக்கிய பதவிகளை வகித்து அர்ப்பணிப்புடனும் நேர்மையுடனும் வெளிப்படைத்தன்மையுடனும் பல்கலைக் கழகத்தின் தரத்திலும் அக்கறையுடன் தனது பணிகளை ஆற்றி வந்துள்ளார். உண்மைகளை எப்போதும் வெளிக்கொணர்வதில் முன்னிற்பவர். இதனால் பலரது கோபங்களுக்கும் உள்ளாகி பல துன்பங்களையும் அனுபவித்துள்ளார்.

**சிறந்த ஆய்வாளராக:** இவற்றுக்கு மேலாக இவர் ஒரு சிறந்த ஆராய்ச்சியாளராக இருந்துள்ளார். இவர் 45 இற்கு மேற்பட்ட முழு ஆய்வுக்கட்டுரைகளையும் 175 இற்கு மேற்பட்ட மாநாட்டு ஆய்வு அறிக்கைகளையும் வெளியிட்டுள்ளதுடன் 5 முதுதத்துவமாணி மாணவர்களுக்கு மேற்பார்வையாளராகவும் பணியாற்றியுள்ளார். NRC மற்றும் NSF போன்றவற்றிலிருந்து ஆராய்ச்சி நிதியைப் பெற்று தனது ஆய்வுப்பணிகளை மேற்கொண்டுள்ளார். யாழ்ப்பாண பல்கலைக்கழக சர்வதேச ஆய்வு மாநாட்டு (JUICe -2018) தலைவராக இருந்து தனது அளப்பரிய பங்களிப்பை நல்கியுள்ளார். பல ஆய்வு மாநாடுகள் மற்றும் ஆய்வேடுகளின் மதிப்பீட்டாளராகவும் வளவாளராகவும் பணியாற்றியுள்ளதுடன் ஜனாதிபதி ஆராய்ச்சி விருதையும் பெற்றுக் கொண்ட ஒரு சிறந்த ஆராய்ச்சியாளனாகவும் பாலா தன்னை நிரூபித்திருந்தார்.

**சிறந்த நிர்வாகியாக:** 2003 இல் உயிர் இரசாயனவியல் துறையில் சிரேஷ்ட விரிவுரையாளராக உள்நுழைந்த பாலா 2005 இல் இருந்து இறக்கும் வரை துறையின் துறைத்தலைவராக பணியாற்றியதுடன் 2012 இல் மருத்துவ பீடத்தில் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டு 2012 தொடக்கம் 2015 வரை பீடாதிபதியாகப் பணியாற்றினார். தொடர்ந்து இரண்டாவது தடவையும் அவரைப் பீடாதிபதியாக கொண்டு வர பீடம் விரும்பிய போதும் பாலா பிறிதொருவரைப் பீடாதிபதியாக தானே முன்மொழிந்து அவரையே பீடாதிபதியாக வருவதற்கு உறுதுணையாக நின்ற ஓர் உத்தமர் ஆவார். இவற்றுக்கு மேலாக இணைந்த சுகாதார அலகின் கல்வி நிர்வாக ஒருங்கிணைப்பாளராக, முன்மருத்துவ ஒருங்கிணைப்பாளராக, சித்த மருத்துவ பிரிவின் முகாமைத்துவ சபையின் உறுப்பினராக, மருத்துவ அறிவியல் படிப்பு வாரியத்தின் தலைவராகவும், பணியாற்றியுள்ளார். மேலும் உயர் பட்டப் படிப்புகள் பீடத்தின் உறுப்பினராகவும், ஆயுட்கால விஞ்ஞான சபை உறுப்பினராகவும் பல நிலைகளில் பணியாற்றியுள்ளார்.

உலக வங்கியின் நிதி உதவியுடன் இளமாணி மாணவர்களின் தரத்தை மேம்படுத்துதல் (IRQUE) திட்டத்தின் ஒரு பகுதியாக இருந்த மருத்துவப் படிப்புத்திட்டத்தின் தர மேம்பாட்டு நிதியின் (QEF) ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்பட்ட போது பாலா கொள்முதலில் தனது நிபுணத்துவத்தைப் பெற்றார். இதனூடாக 100 மில்லியன் ரூபாவை முழுமையாகப் பயன்படுத்தி 54 இருக்கைகள் கொண்ட சொகுசு பேருந்து மற்றும் 12 இருக்கைகள் கொண்ட வான் ஒன்றையும் கொள்வனவு செய்ய முடிந்தது. இது தொடர்பான கூட்டங்களுக்கு A-9 வீதி மூடப்பட்டிருந்த போது சொந்தப் பணத்தில் பிரயாணம் செய்து கொழும்பு சென்று வந்து அதில் வெற்றியும் கண்டார். இத்தகைய பாலாவின் அர்ப்பணிப்பும் உறுதியும் மருத்துவ பீடத்திற்கு பல உயர்தர உபகரணங்களைப் பெறுவதற்கும் பல்வேறு துறைகளைப் புதுப்பிப்பதற்கும் திறன் ஆய்வகத்தை மேம்படுத்தவும் பேருந்திற்கான தரிப்பிடம், மினி ஜிம்னாசியம் என்பன மருத்துவ பீட மாணவர்களுக்கு கிடைப்பதற்கும் உதவியது. நான் துணைவேந்தராக இருந்த போது அவரது அறிவுத்திறனையும் நிபுணத்துவ ஆற்றலையும் வெளிக்கொணர முடிந்தது. அப்போதிருந்து அவர் கற்பித்தல் உபகரணங்கள் தொடக்கம் வாகனங்கள் மற்றும் பணியாளர்களின் சீருடை வரையான கொள்வனவு தீர்மானம் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டு தர நிர்ணயம் தொடர்பான பல மதிப்பீட்டுக் குழுக்களில் முக்கிய பதவிகளில் இருந்து வந்ததுடன் தற்போதைய துணைவேந்தர் இக் குழுக்களின் தலைவராக பாலாவையே நியமித்து இருந்தமையால் பாலா இறக்கும் வரை மேற்படி பணிகளை சிறப்பாக மேற்கொண்டு வந்துள்ளார்.

மருத்துவ பீடத்தில் பாலா திட்ட கண்காணிப்பு குழுவின் தலைவராகப் பணியாற்றி வந்தார். ஆராய்ச்சி மற்றும் அது தொடர்பான பல நிர்வாகப் பணிகளில் தனது பணிகளை செவ்வனே ஆற்றி வந்துள்ளார். இவை தவிர மாணவ ஆலோசகராக, விளையாட்டு ஆலோசனைக் குழு உறுப்பினராக மட்டுமன்றி மாணவர்களுக்கு பல்வேறு வழிகளில் பல உதவிகளை வழங்கியுள்ளார்.

**தேசிய மற்றும் பிராந்திய ரீதியிலுமான பங்களிப்பு:** பாலா கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ முதுமாணி நிறுவகத்தின் உறுப்பினராக பணியாற்றியுள்ளார். அடிப்படை மற்றும் மருத்துவ அறிவியல் சபையின் உறுப்பினர், உத்தியோகபூர்வ மொழிகளின் கொள்கை மற்றும் சக வாழ்வு பற்றிய மரபுவழி பட்டறை உறுப்பினர், யாழ்ப்பாணம் சுன்னாகம் கழிவு எண்ணெய் கசிவு காரணமாக நிலத்தடி நீர் மாசு தொடர்பான பகுப்பாய்வு உறுப்பினர், இலங்கை அங்கீகார சபையில் அடையாளங்காணப்படாத ஏட்டியோலஜின் நீண்ட கால சிறுநீரக நோயைத் தணிக்கும் இலங்கை அங்கீகார சபையின் உறுப்பினர், திக்கம் வடிசாலையின் கொள்முதல் குழுவின் ஆலோசகர் மற்றும் யாழ்ப்பாண பனை அபிவிருத்தி சபை உறுப்பினர், யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம், ஆசிரியர் சங்கம் மற்றும் ஆலய திருப்பணிகள் என பல வழிகளில் எமது சமூகத்திற்கும் ஒட்டுமொத்த நாட்டிற்கும் தன்னால் இயன்ற பங்களிப்புக்களை மிகவும் மனநிறைவுடன் வழங்கியுள்ளார்.

**முடிவாக:** பாலாவின் மகிழ்ச்சியான முகத்தையும் எல்லோரிடமும் அவர் கொண்டிருந்த அன்பையும் அக்கறையையும் சிறு விநாடிகள் மட்டும் நீடிக்கும் கோபத்தையும் துறையின் வளர்ச்சிக்கு அவர் வழங்கிய புதிய யோசனைகளையும் தொழில்நுட்ப ஆலோசனைகளையும் துறையை நவீனமயமாக்கும் ஆர்வத்தையும் தன்னகத்தே கொண்டிருந்த பாலாவை இழந்து விட்டோம். பாலாவின் கனவும் விருப்பமுமான Cold Room அமைத்தல் நிறைவேறும் என்றும் பாலாவின் அளப்பரிய முயற்சியால் கிடைத்த Clinical Departments கட்டடத்திற்கு பாலாவின் பெயரைச் சூட்ட பல்கலைக்கழகம் ஆவன செய்யும் என்றும் உறுதியாக நம்புகின்றேன். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினதும் மருத்துவபீடத்தினதும் உயிர் இரசாயனவியல் துறையினதும் அவரது குடும்பத்தினரதும் பாலாவின் இழப்பால் ஏற்பட்ட வெற்றிடம் ஈடுசெய்யப்பட முடியாத ஒன்றாகவே உள்ளது. இறுதியாக பாலாவின் ஆத்மா சாந்தியடைந்து எல்லாம் வல்ல பிள்ளையாரின் திருப்பாதங்களில் அமைதிபெற எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**பேராசிரியர் வசந்தி அரசரட்ணம்**
**சிரேஷ்ட பேராசிரியர் உயிர் இரசாயனவியல் துறை மருத்துவ பீடம் யாழ்.பல்கலைக்கழகம்,**
**முன்னாள் துணைவேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உறுப்பினர்.**

# இலவச குரக்கன் விதை விநியோகம்

(குப்பிழான்)

நாட்டில் தற்போது நிலவி வரும் கடும் பொருளாதாரப் பாதிப்பு நிலைமையைக் கருத்திற் கொண்டு "பஞ்சம் வருமுன் பயிரிடுவோம்" எனும் தொனிப் பொருளில் ஆன்மிகச் சுடர். ரிஷி தொண்டுநாதன் சுவாமிகளை முதல்வராகக் கொண்ட கோப்பாய் சுப்பிரமுனிய கோட்ட நிர்வாகம் பல்வேறு செயற்றிட்டங்களை மேற்கொண்டு வருகின்றது.

இதன் ஒரு கட்டமாக சிறுதோட்டச் செய்கையை ஊக்குவிப்பதற்காக மேற்படி கோட்டத்தினரால் இலவச குரக்கன் விதை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. ஆர்வமுள்ளவர்கள் 077 959 2260 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் ஆன்மிகச் சுடர். ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் கேட்டுக் கொண்டுள்ளார்.

(நி-6-18)

# தற்போதைய சூழ்நிலையில் வடக்கு-கிழக்கு மக்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டும்

## விமல தேரர் தெரிவிப்பு

(நெளுக்குளம்)

தற்போதைய சூழ்நிலையில் வடகிழக்கில் வசிக்கும் மூவினத்தவரும் ஒற்றுமையாக இருப்போம் என வடக்கு முதன்மை சங்கநாயக்க தேரர் பூஜ்ய சியம்பலாகஸ்வெவ விமலசார தேரர் தெரிவித்தார். நாட்டுநிலைமை தொடர்பாக நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

அரசுக்கு எதிராக கொழும்பு காலி முகத்திடலில் ஒரு மாதத்திற்கும் மேலாக அகிம்சை ரீதியான போராட்டம் இடம்பெற்றுவந்தது. அதனை பொருட்படுத்தாத அரசாங்க ஆதரவாளர்கள் அவர்களை தாக்கி அவர்களது போராட்டத்தை குழப்பியமையாலேயே நாட்டில் இந்த சூழ்நிலை உருவாகியுள்ளது. இந்த சூழ்நிலையில் எங்களுக்குள் இனமத மொழி பேதம் பார்த்தால் போராட்டத்தின் நோக்கமே தடம் மாறிப்போய் விடும். எனவே அதற்கு இடம்கொடுக்காமல் அனைத்து இனத்தவரும் ஒற்றுமையாக ஒன்றிணைந்தாலே இந்த போராட்டம் வெற்றியடையும்.

எனவே வடக்கு கிழக்கில் வசிக்கும் தமிழ் சிங்கள முஸ்லிம் சகோதரர்கள் இப்படியான சூழ்நிலையில் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன் எனத் தெரிவித்தார். (4-6-299)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார நிலைமை மேலும் மோசமாகும்

# மத்திய வங்கி ஆளுநர் எச்சரிக்கை



(கொழும்பு)

**அரசியல் ஸ்திரத்தன்மையை விரைவில் ஏற்படுத்தாவிட்டால் நாட்டின் பொருளாதார நிலைமை மேலும் மோசமாகும் என மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.**

நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பேசிய அவர், இந்த நெருக்கடிகளுக்கு இரண்டு வாரங்களுக்குள் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வு கிடைக்காவிட்டால், பதவி விலகுவேன் என்றும் தெரிவித்துள்ளார்.

தற்போதைய நிலைமை தொடர்ந்தால், நாளாந்தம் 10 முதல் 12 மணிநேர மின்வெட்டு, எரிபொருள் மற்றும் பிற அத்தியாவசியப் பொருட்களுக்கு பாரிய தட்டுப்பாடு ஏற்படலாம் என்றும் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க எச்சரிக்கை விடுத்துள்ளார். (நி-6)

## மக்களை பாதிக்கும் வகையில் மின்வெட்டு மேற்கொள்ளப்படாது

### மின்சாரசபை பொறியியலாளர் சங்கம்

(கொழும்பு)

பாதிக்கப்பட்ட மக்களை ஒடுக்கும் வகையில் மின்வெட்டு மேற்கொள்ளப்படாது என இலங்கை மின்சார சபை பொறியியலாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

மின் இணைப்பை துண்டித்து தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக சமூக வலைதளங்களில் பரவி வரும் வதந்திகள் உண்மைக்குப் புறம்பானது என்றும் அனில் ரஞ்சித் தெரிவித்தார்.

"மக்களுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் மின் இணைப்பை துண்டிக்கும் எண்ணம் எப்பொழுதும் எமக்கு இருந்ததில்லை. நாம் அனைவரும் வெளியேறினால் நிச்சயமாக மின்சாரம் துண்டிக்கப்படும்.

ஆனால் அத்தகைய செயலை நாம் செய்யப் போவதில்லை. ஏனெனில் இந்த நேரத்தில் மின்சாரத்தை பராமரிப்பது மிகவும் முக்கியமாகும் என அவர் தெரிவித்தார். (நி-6)

## இந்தியப் படைகள் இலங்கைக்கு வருமா?

### மறுக்கிறது இந்தியா

(டில்லி)

இந்தியா தனது படைகளை இலங்கைக்கு அனுப்புவது குறித்து ஊடகங்களில் வெளியாகும் செய்திகளை இந்திய உயர்ஸ்தானிகராலயம் திட்டவட்டமாக மறுப்பதாக தெரிவித்துள்ளது.

இது குறித்து இந்திய உயர்ஸ்தானிகராலயம் தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பதிவில் மேலும் தெரிவித்துள்ளதாவது.

"இந்தியா தனது படைகளை இலங்கைக்கு அனுப்புவது குறித்து ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்களில் வெளியாகும் செய்திகளை இந்திய உயர்ஸ்தானிகராலயம் திட்டவட்டமாக மறுக்கின்றது.

இவ்வாறு வெளியாகும் அறிக்கைகள் மற்றும் அத்தகைய கருத்துக்கள் நிலைப்பாட்டிற்கு ஏற்பவையாக இல்லை."

"இலங்கையின் ஜனநாயகம், ஸ்திரத்தன்மை மற்றும் பொருளாதார மீட்சிக்கு இந்தியா முழுமையாக உறுதுணையாக இருப்பதாக இந்திய வெளிவிவகார அமைச்சின் ஊடகப் பேச்சாளர் நேற்று முன்தினம் தெளிவாகத் தெரிவித்துள்ளார்" என அந்த டுவிட்டர் பதிவில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-6)

## புதிய பிரதமரை நியமித்துவிட்டு ஜனாதிபதி உடனடியாக பதவி விலக வேண்டும்



### சுமந்திரன் எம்.பி

(கொழும்பு)

"புதிய பிரதமரை உடனடியாக நியமித்துவிட்டு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவியிலிருந்து விலக வேண்டும்." என அவசர வேண்டுகோள் விடுத்துள்ளார் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது,

"நாட்டின் நெருக்கடி நிலைமைக்கு ஜனாதிபதியும் பிரதமருமே முழுப் பொறுப்பு. அதனால் தான் இருவரையும் பதவி விலகக் கோரி மக்கள் ஒரு மாதத்துக்கு மேலாகப் போராடி வருகின்றனர்.

இந்நிலையில், பிரதமர் பதவியிலிருந்து மகிந்த ராஜபக்ஷ விலகியுள்ளார். இதையடுத்து முழு அதிகாரங்களும் ஜனாதிபதியின் கைகளுக்குச் சென்றுவிட்டன. இது நிலைமையை மேலும் மோசமாக்கும்.

இதனிடையே மக்களின் எதிர்ப்புப் போராட்டங்களும், வன்முறைச் சம்பவங்களும் தீவிரமடைந்துள்ளன.

எனவே, புதிய பிரதமரை உடனடியாக நியமித்துவிட்டு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் பதவியிலிருந்து விலக வேண்டும்.

அப்போது தான் நெருக்கடி நிலைமைக்குத் தீர்வு கிடைக்கும்" என அவர் தெரிவித்தார். (நி)

## மத்திய வங்கி ஆளுநரை சந்தித்தார் அமெரிக்கத் தூதுவர்

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்கவை சந்தித்து தற்போதைய நெருக்கடி நிலைகுறித்து இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் கலந்துரையாடியுள்ளார்.

இலங்கையின் பொருளாதார நெருக்கடியை நிவர்த்தி செய்வதற்கான தற்போதைய முயற்சிகள் குறித்தும் இதன்போது கலந்துரையாடியுள்ளார். (நி-6)

## ரயில் சேவைகள் இடைநிறுத்தம்

(கொழும்பு)

மறு அறிவித்தல் வரை அனைத்து ரயில் சேவைகளும் இடை நிறுத்தப்பட்டுள்ளதாக ரயில்வே பொது முகாமையாளர் நேற்று முன்தினம் அறிவித்துள்ளார்.

அதன்படி நேற்று இரவு முதல் அனைத்து இரவுநேர தபால் சேவை ரயில்களும் நிறுத்தப்பட்டன.

நாட்டில் பல்வேறு இடங்களிலும் அரசுக்கெதிரான அமைதி வழிப் போராட்டங்கள் தற்போது வன்முறைச்சம்பவங்களாக மாறியுள்ளதால் ஊரடங்குச் சட்டம் நீடிக்கப்படுவதை கருத்திற்கொண்டு மறு அறிவித்தல் வரை அனைத்து ரயில் சேவைகளையும் இடைநிறுத்த ரயில்வே திணைக்களம் தீர்மானித்துள்ளது. (நி-6)

## காலிமுகத்திடல் போராட்டக்காரர்களுடன் கிரிக்கெட் ஜாம்பவான் ரோஷன்

(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித் தலைவர் ரோஷன் மஹானாமா காலிமுகத்திடல் போராட்டத்தில் நேரடியாக கலந்து கொண்டு தனது ஆதரவை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது டுவிட்டர் பதிவில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நாட்டில் ஏற்பட்டுள்ள குழப்பத்தை பார்த்துக்கொண்டு வீட்டில் இருக்க விரும்பவில்லை. சக எதிர்ப்பாளர்களுடன் ஒற்றுமையாக நிற்கவும், ஊழல் மற்றும் அதிகார வெறி கொண்ட தலைவர்களுக்கு எதிரான போராட்டத்திற்கு துணை நிற்கவும் எனது ஆதரவை தெரிவிக்க காலிமுகத்திடலுக்கு வந்தேன்.

ஒரு மாத காலம் போராட்டமானது அமைதியாக நடப்பதை மறந்துவிடாதீர்கள். வன்முறை முயற்சிகள் இருந்த போதிலும் அமைதியே தொடர வேண்டும். வன்முறையில் ஈடுபட வேண்டாம். தொடர்ந்து அமைதியான முறையில் போராட்டம் நடத்துவோம் என்றும் தெரிவித்துள்ளார். (நி-6)

## முன்னாள் பிரதமரை பாதுகாப்பது முப்படையினரின் கடமை

### இராணுவத் தளபதி

(கொழும்பு)

மக்களால் தெரிவு செய்யப்பட்ட தலைவரான முன்னாள் பிரதமரை பாதுகாப்பது அரசியலமைப்பின் படி முப்படையினருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கடமையாகும் என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். பாதுகாப்பை கருத்திற்கொண்டு முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை திருகோணமலைக்கு அழைத்துச் சென்றதாக பாதுகாப்புச் செயலாளர் கமால் குணரத்ன தெரிவித்துள்ள நிலையில், சவேந்திர சில்வா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் மக்களின் பாதுகாப்பிற்காகவே இராணுவத்தினர் களத்தில் இறக்கப்பட்டுள்ளனர் என்றும் எனவே அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்தோடு, நாட்டில் வன்முறைகள் பாரதூர மானால் அவற்றை கட்டுப்படுத்தும் அதிகாரம் இராணுவத்திற்கு வழங்கப்படுமே தவிர, அது ஒரு போதும் இராணுவ ஆட்சியாக மாறாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

## ஏன் போகவில்லை?



தன் முயற்சியில் சற்றும் மனம் தளராத விக்கிரமன் மீண்டும் மரத்தின் மீதேறி அதில் தொங்கும் உடலைக் கீழே வீழ்த்தினான். பின்னர் கீழே இறங்கி அவன் அதனைச் சுமந்து கொண்டு மயானத்தை நோக்கிச் செல்கையில் அதனுள்ளிருந்த வேதாளம் எள்ளி நகைத்து "மன்னனே! இந்த பயங்கர நடுநிசியில் ஏன் இப்படி ஒரு வேலையைச் செய்கிறேன் என்று சற்று யோசித்துப் பார்த்தாயா? உணர்ச்சிவசப்பட்டு உனக்குக் கிடைக்கப் போகும் நல்வாய்ப்பைக் கை நழுவ விட்டு விடப் போகிறாயா? இதற்கு உதாரணம் பால கிருஷ்ணன். அவன் கதையை கூறுகிறேன். கவனமாகக் கேள்.

வெகு காலத்திற்கு முன் சந்திர ப்ரியின் இளவரசி சந்திரலேகா தன் தோழிகளுடன் உல்லாசப் பயணமாகக் கிளம்பினாள். அவள் அமர்ந்திருந்த ரதம் ஒரு காட்டு வழியே செல்கையில் பலவிதப் பட்சிகள் கத்துவது கேட்டு மகிழ்ந்து கொண்டிருந்தாள். அப்போது இனிய குழலோசை அவள் காதில் விழுந்தது. உடனே அவள் தன் ரதத்தை நிறுத்தி கீழே இறங்கி அந்த இன்னிசை வந்த இடத்தை நோக்கிச் சென்றாள். அவள் பின்னால் தோழிகளும் சென்றனர். அவர்கள் ஒரு மரத்தடியே இருபத்தைந்து வயதுள்ள ஒரு வாலிபனைக் கண்டார்கள்:

அவன் தன்னை மறந்து குழலை இசைத்துக் கொண்டிருந்தான். சந்திரலேகாவும் அவளது தோழிகளும் சத்தம் செய்யாமல் அவனருகே நின்றனர். சற்று நேரமானதும் அந்த வாலிபன் தான் இசைப்பதை நிறுத்திப் புல்லாங்குழலைக் கீழே வைத்தான்.

அப்போது இளவரசி கைதட்டி அவனைப் பாராட்டி "உன் வாசிப்பு என்னைப் பெரிதும் கவர்ந்து விட்டது. உன் பெயர் என்ன?" என்று கேட்டாள். அவனும் "என் பெயர் பால கிருஷ்ணன். அதோ தெரியும் கிராமத்தில் வசிப்பவன். ஆடு, மாடுகளை மேய்க்க தினமும் இங்கு வருகிறேன்" என்றான். மேலும் அவன் சந்திரலேகாவை வைத்த கண் வாங்காமல் பார்த்தவாறு நின்றான்.

சந்திரலேகாவும் "பால கிருஷ்ணா! நான் இந்நாட்டு இளவரசி சந்திரலேகா. உன் இசை எனக்குப் பிடித்துப் போயிற்று.


நீ என் அரண்மனைக்கு வா. உனக்கு இருக்க எல்லா வசதிகளையும் செய்து கொடுக்கிறேன். உனக்கு மாதச் சம்பளமாகக் கணிசமான தொகையும் கிடைக்கும். நீ தினமும் மாலையில் உன் இசையால் எங்களை மகிழ்விக்க வேண்டும். இது பற்றி நீ யோசித்து ஒரு முடிவிற்கு வா" என்று கூறி ஒரு வைர மாலையை எடுத்து பரிசாகக் கொடுத்து விட்டுப் போனாள்.

(தொடரும்)

# கம்பராமாயணம்

## கிட்கிந்தா காண்டம்

98



"என் தம்பி மது உண்டு, அம் மயக்கத்தில் கடமை செய்வதில் தவறக்கூடும்; அதைப் பெரிதாகக் கொள்ளாது அவனை மன்னித்துவிடு; என் மீது செலுத்திய அம்பை அவன் மீது செலுத்த வேண்டா, அதைத் தாங்கும் ஆற்றல் அவனுக்கு இல்லை" என்று தம்பியின் மீது கொண்ட பாசம் வெளிப்படும்படி இவ்வரத்தைக் கேட்டான். வாலி சிறியன சிந்தியாதான் என்பதை இராமன் இதனால் அறிய முடிந்தது.

"மற்றொரு வரம் வேண்டுகிறேன்; என் தம்பியை உன் தம்பிமார்களுள் யாராவது தமையனைக் கொன்றவன், என்று கூறி இகழ்வாராயின், அதைத் தடுத்து நிறுத்த வேண்டும்" என்று கேட்டுக் கொண்டான். வாலி இராமன் மதிப்பில் மிக உயர்ந்து நின்றான்.

"அனுமனை உன் வில்லைப்போல வலிமையுள்ள துணைவனாய் ஏற்றுக்கொள்; சுக்கிரீவனை உன் தம்பி இலக்குவனைப்போல ஏற்றுப் பாசமும் பரிவும் காட்டு; இவர்கள் துணைகொண்டு சீதையைத் தேடி அடைவாயாக" என்று இறுதியில் கூறினான்.

தன் தம்பியைப் பார்த்து அவனுக்கு அறிவுரைகள் சில கூறினான். "இராமனுக்கு ஏவல் செய்யும் பேறு பெற்றிருக்கிறாய்; நீ உன் கடமைகளினின்று தவறக் கூடாது; பெரியவர்கள் சுவகாசம் நெருப்புப் போன்றது; நீங்கினால் குளிர் காய முடியாது; நெருங்கினால் சுட்டு எரித்து விடும்; "மேல் மட்டத்து வாசிகள் அடிமைகள் செய்யும் தவறுகளை மன்னிப்பார், என்று நினையாதே; அவர்களுக்குப் பயன் படாவிட்டால் தூக்கி எறிந்து விடுவர்; மன்னர்கள் அடிமைகளை மன்னிக்கமாட்டார்கள்; பெரிய இடத்து உறவு கத்தி முனையில் நடப்பது போன்றது; கவனமாய் நடந்து கொள்" என்பது அவன் அறிவுரை. வாலி மைந்தனான அங்கதன், தன் தந்தை மரணமறிந்து விரைந்து வந்தான்; சாகும் தறுவாயில் இருந்த வாலியைப் பார்த்துப் பலவாறு கூறிப் புலம்பினான்.

"என் தந்தையே! எமன் வருவதற்கு அஞ்சும் உன்னை மரணம் எப்படித் தழுவியது? இனி இராவணன் உன்னைப் பற்றிய அச்சம் நீங்கி நிம்மதியாய் வாழப் போகிறான்; இது உறுதி, பாற்கடலைக் கடையத் தேவர்க்கு உன்னைத் தவிர உதவ யார் இருக்கிறார்கள்? அமுதத்தைத் தேவர்களுக்கு ஈந்து, மரணத்தை நீ ஏற்கிறாய் என்றால், உன்னைவிடக் கொடையாளி யார் இருக்க முடியும்?" அங்கதனைத் தழுவிக் கொண்டு "நீ இனி அயர வேண்டா; நாயகன் இராமன் செய்த நல்வினைப்பயன் இது" என்றான் வாலி.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீய செயல்கள் நம்மைத் துன்புறுத்துவது, அவற்றைச் செய்த காலத்தில் அன்று. வெகுகாலம் சென்று அது ஞாபகத்திற்கு வரும்போதுதான்.

– ரூஸோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இலக்குப் பிசகாத தென்பகுதிப் போராட்டம்

பதவி விலகுமாறு பொதுமக்கள் கேட்டபோது மகிந்த ராஜபக்ஷ தனது பிரதமர் பதவியை இராஜினாமாச் செய்திருப்பாராயின், கௌரவத்தோடு அவர் வீடு சென்றிருக்க முடியும்.

ஆனால் கெடுகுடி சொற்கேளாதென்பது போல, கடைசிவரை பிரதமர் பதவியை விட்டுக் கொடுப்பதற்கு இணங்காத மகிந்த ராஜபக்ஷ, வெள்ளம் தலைக்கேறிய பின்பு குண்டர்கள் மூலம் கலவரத்தை ஏற்படுத்திவிட்டு, பிரதமர் பதவியை இராஜினாமாச் செய்ய,

பொதுமக்கள் அலரிமாளிகையைச் சுற்றி வளைத்து அங்கேயே மகிந்த ராஜபக்ஷவுக்குச் சமாதி கட்டத் தயாராகினர்.

இதனையடுத்து மகிந்த ராஜபக்ஷ அலரிமாளிகையில் இருந்து தப்பிச் சென்று திருகோணமலையில் தஞ்சமடைந்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவை ஒருபுறமிருக்க, மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவான குண்டர்கள் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்தியபோது உடனடியாகவே திரண்டெழுந்த மக்கள் குண்டர்களைப் பிடித்து தர்ம அடி போட்டனர்.

இதனைத் தொடர்ந்து மகிந்த ராஜபக்ஷவின் பூர்வீக வீடு உட்பட ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களுக்குச் சொந்தமான வீடுகள், வாகனங்கள், கட்சி அலுவலகங்கள் என்பன எரியூட்டப்பட்டன எனும்போது, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த பொதுமக்கள் எத்துணை தூரம் தங்கள் போராட்டத்தைத் திட்டமிட்டிருந்தனர் என்பதை அனுமானிக்க முடியும்.

தவிர, பிரதமர் பதவியை இராஜினாமாச் செய்யும்போது ஒரு பெரும் குழப்பத்தை மகிந்த ஏற்படுத்துவார் என்பதையும் கணித்துக் கொண்டு, அவ்வாறு குழப்பம் செய்தால் அதற்கான பதில் எவ்வாறாக இருக்க வேண்டும் என்பதையும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த பொதுமக்கள் கனகச்சிதமாகத் திட்டமிட்டிருந்தனர் என்பதும் இங்கு புரிதற்குரியது.

இங்குதான், ஒரு விடயம் தெளிவாகிறது. அதாவது ராஜபக்ஷ தரப்புக்கு எதிராகப் போராட்டம் நடத்துகின்ற மக்கள் ஒருபோதும் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருப்பதை அனுமதிக்க மாட்டார்கள்.

எனவே எதிர்காலத்தில் ஜனாதிபதிக்கு எதிரான போராட்டம் உச்சமடையும் என்பது சர்வ நிச்சயம்.

எனினும் தற்போது தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள குழப்பங்களும் களேபரங்களும் தணிக்கப்படாவிடில் பொதுமக்களின் இலக்குத் திசைமாறும் என்பதால், நிலைமையைச் சுமுகமாக்கும்பொருட்டு போராட்டங்கள் சற்றுத் தணியவே செய்யும்.

இந்தத் தணிவைப் பயன்படுத்தி சர்வகட்சி அரசாங்கத்தை அமைத்துவிட்டு, தனது பதவியை கோட்டாபய ராஜபக்ஷ இராஜினாமாச் செய்வாராயின், மகிந்தவைவிட கோட்டாவுக்கு அரசியல் தெரிகிறது என்றேனும் மக்கள் தமக்குள் உரையாடிக் கொள்வர்.

இதைவிடுத்து இல்லை என்று அவர் அடம்பிடித்தால் நிலைமை அம்போ என்றாகிவிடும்.

# 'கோட்டா கோ கம' கிராமத்தில் தொடரும் போராட்டம் சட்டவிரோதமானது

## பொலிஸார் எச்சரிக்கை

(கொழும்பு)

கொழும்பு காலி முகத்திடல் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள கோட்டா கோ கம கிராமத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டம் சட்டவிரோதமானது என பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

நாட்டில் பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளை சட்டத்தின் 2 ஆவது சரத்தின் பிரகாரம் கடந்த மே 6 முதல் அவசரகால சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

பொது மக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் 16 ஆம் சரத்தின் கீழ் நாடு முழுவதும் மே 9 ஆம் திகதி மாலை 7 மணி முதல் இன்று காலை 7 மணிவரை ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியொருவரின் எழுத்து மூல அனுமதியின்றி பொது வீதிகள், தொடருந்து மார்க்கங்கள், பொது பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள் அல்லது வேறு பொது இடங்களிலும் கடற்கரைகளிலும் இருப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

அதனை மீறி காலி முகத்திடலில் "கோட்டா கோ கம" என்ற பெயரில் முகாம் அமைத்து போராட்டத்தை நடத்துவது சட்டவிரோதமானது என்று பொலிஸார் எச்சரித்துள்ளனர்.

மேற்படி போராட்டம் இடம்பெறும் பகுதியில் ஒலிபெருக்கி மூலம் பொலிஸார் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளனர். (ம)

# சமூக வலைத்தளங்கள் மூலம் வன்முறை தூண்டல்

## இதுவரை 59 குழுக்கள் அடையாளம் பொலிஸார் அறிக்கை

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்ட அமைதியின்மையின் போது வன்முறையைத் தூண்டியது தொடர்பாக 59 சமூக ஊடகக் குழுக்கள் மற்றும் அவற்றின் நிர்வாகிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸ் அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

நாட்டில் அமைதியின்மையை ஏற்படுத்தும் வகையில் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என இலங்கை பொலிஸார் எச்சரித்துள்ளனர்.

வீடுகள், வாகனங்கள் மற்றும் பிற சொத்துக்கள் மீது தாக்குதல்களை நடத்துவதற்காக பல்வேறு சமூக ஊடக தளங்களில் இயங்கும் குழுக்கள் மூலம் மக்கள் திரட்டப்பட்டதாக பொலிஸ் தெரிவித்துள்ளது.

சமூக ஊடக குழுக்கள் மற்றும் நிர்வாகிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக கூறியுள்ள பொலிஸார், இது தொடர்பில் ஏற்கனவே சட்ட நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

நாடு முழுவதும் கடந்த திங்கட்கிழமை ஏற்பட்ட அமைதியின்மையின்போது சமூக ஊடகங்கள் ஊடாக வன்முறையை தூண்டியதாக கண்டறியப்பட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என இலங்கை பொலிஸார் பொதுமக்களை எச்சரித்துள்ளனர். (ம)

# எரிபொருள் விநியோகத்தில் இருந்து விலகுகின்றோம்

## பவுசர் உரிமையாளர்கள் அறிவிப்பு

நிலைமை வழமைக்குத் திரும்பும் வரை எரிபொருள் விநியோகத்தில் இருந்து விலகுவதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன தனியார் எரிபொருள் தாங்கி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

விநியோகத்திற்காக வந்துள்ள அனைத்து பவுசர்களும் கொலன்னாவ எரிபொருள் களஞ்சிய வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக சங்கத்தின் இணைச் செயலாளர் சாந்த சில்வா தெரிவித்துள்ளார். (ம)

# முல்லையில் 67 வயது பெண் துஷ்பிரயோகம்

## சந்தேக நபர் கைதாகி விளக்கமறியலில்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவில் 67 வயது பெண் ஒருவர் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் 38 வயது சந்தேக நபர் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளியவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதி ஒன்றில் வசிக்கும் 67 வயதுடைய பெண்ணொருவர் கடந்த 7ஆம் திகதி அன்று இரவு தன்னுடைய பேத்தியின் 38 வயதான கணவன் மது போதையில் வந்து தனக்கு பலவந்தமாக சாராயம் பருக்கி துஷ்பிரயோகம் செய்ததாக முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

முறைப்பாட்டை தொடர்ந்து குறித்த பெண் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் வைத்திய பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் குறித்த பெண்ணை துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் 38 வயதான குறித்த நபர் முள்ளியவளை பொலிஸாரல் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.

இந்நிலையில் சந்தேக நபர் நேற்று மாங்குளம் நீதவான். நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டபோது எதிர்வரும் 24 ஆம் திகதி வரை குறித்த நபரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

(ம-281)

# சத்திய தரிசனம்



## சத்தியம்

❖ மேலும் இதே காலப்பகுதியில் நான் தியானத்தில் இருந்தபோது உனக்கு மனநோய் இல்லை என்று நமது சுவாமி கூறினார். இப்போது எவ்வித நோயும் இல்லாமல் நமது சுவாமியின் கருணையால் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். வைத்தியர்கள் குணமாக்க முடியாத நோயை நமது சுவாமி எனக்கு குணமாக்கியுள்ளார். இதுதான் சுவாமியின் கருணை, அவர் கடவுளல்லவா? அவர் சர்வ சாயி. அவர் ஒரு மனிதனில் உறைகின்ற ஆத்மா அல்லவா? அவர் தாய்மாரின் கருணையை அல்லவா கொண்டுள்ளார். அவர் நமது சுவாமி அவர்கள் தனது அருளமுத உரையில் குறிப்பிட்ட ஒரு விடயத்தை இங்கு குறிப்பிடுகிறேன். எவன் ஒருவன் 'என்னில் பூரண விசுவாசம் கொண்டவனாக இருக்கின்றானோ அவன் ஏதாவது ஒன்றைக் கேட்டால் நான் அவனுக்காக நூறு கேட்காமலே கொடுக்க தயாராக இருக்கிறேன் என்று கூறினார். இதுதான் நமது சுவாமியின் கருணை அவர் கருணைக்கடல் அல்லவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலப்பு தேர்தல் முறையில் மாகாண சபைத் தேர்தலுக்கான எல்லை நிர்ணய அறிக்கை-ஒரு பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 64

### ஊவா மாகாணம் இனங்கள் அடிப்படையில் சனத்தொகை மாற்றம் 2012

மாகாணத்தின் சனத்தொகை இன ரீதியில் ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு ஏற்ற வித்த்தில் அட்டவணை 4.3 குறிப்பிடப்பட்டுள்ளது. ஊவா மாகாண சனத்தொகையின் பெரும்பான்மையினராக சிங்கள வர்கள் (80.8%) வசிக்கின்றனர். இரண்டாவதாக தமிழர்கள் (14.7%), அதற்கு அடுத்ததாக இலங்கை முஸ்லிம்கள் (4.3%). மற்றைய இனத்தவர்களான பேர்கர், மலே, இலங்கைச் செட்டி மற்றும் பாரத மக்கள் 0.2% வசிக்கின்றனர். இலங்கையில் உள்ள சிங்களவர்கள் சனத்தொகையில் 6.7 % ஊவா மாகாணத்தில் வசிக்கின்றனர். தமிழர்கள் தொகையில் (இலங்கைத் தமிழர்கள் மற்றும் இந்தியத் தமிழர்கள்) 6% முஸ்லிம்கள் தொகையில் 2.9% ஊவா மாகாணத்தில் வசிக்கின்றனர்.

அட்டவணை 4.3: இன அடிப்படையில் சனத்தொகை வீத பரம்பல் – ஊவா மாகாணம்

| பிரதேசம் | சிங்களவர் | இலங்கைத் தமிழர் | இந்தியத் தமிழர் | இலங்கை முஸ்லிம் | வேறு |
|---|---|---|---|---|---|
| பதுளை | 73.0 | 2.7 | 18.5 | 5.5 | 0.4 |
| மொணராகலை | 94.9 | 1.8 | 1.1 | 2.1 | 0.1 |
| ஊவா | 80.8 | 2.4 | 12.3 | 4.3 | 0.2 |
| இலங்கை | 74.9 | 11.1 | 4.1 | 9.3 | 0.5 |

### ஊவா மாகாணம் சமய அடிப்படையில் சனத்தொகை வேறுபாடு - 2012

ஊவா மாகாணத்தின் சனத்தொகையில் கூடிய எண்ணிக்கையானோர் பௌத்தர்களாகும். அதாவது (80.4%) ஆகும். அதற்கு அடுத்ததாக இந்துக்கள் (13.4%) உம் இஸ்லாமியர்கள் (4.5%) உம் உரோமன் கத்தோலிக்கர்கள் மற்றும் ஏனைய சமயத்தினர் (1.8%) ஆகும். இலங்கையின் பௌத்தர்களின் சனத்தெகையில் 7.1 % ஊவா மாகாணத்தில் வசிக்கின்றனர். இந்து மற்றும் இஸ்லாம் மதத்தைப் பின்பற்றுபவர்களின் எண்ணிக்கை முறையே 6.6% மற்றும் 2.9% ஆகும். சமய அடிப்படையில் சனத் தொகை வேறுபாடு அட்டவணை 4.4 இல் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 4.4: சமயங்கள் அடிப்படையில் சனத்தொகை வீத பரம்பல் - ஊவா மாகாணம்

| பிரதேசம் | பௌத்தம் | இந்து | இஸ்லாம் | கத்தோலிக்கம் | வேறு |
|---|---|---|---|---|---|
| பதுளை | 72.6 | 19.3 | 5.8 | 1.5 | 0.8 |
| மொணராகலை | 94.6 | 2.7 | 2.2 | 0.4 | 0.2 |
| ஊவா | 80.4 | 13.4 | 4.5 | 1.1 | 0.7 |
| இலங்கை | 70.1 | 12.6 | 9.7 | 6.2 | 1.5 |

### ஊவா மாகாணம் நிர்வாக, உள்ளூராட்சி மற்றும் தேர்தல் அதிகாரப் பிரதேசங்கள்


நிர்வாக மற்றும் உள்ளூராட்சிக்கு ஏற்புடைய ஊவா மாகாணத்தின் கட்டமைப்பு அட்டவணை 4.5 இல் காட்டப்பட்டுள்ளது.

பதிவு செய்யப்பட்ட வாக்காளர் எண்ணிக்கை.

அட்டவணை 4.5: நிர்வாக மற்றும் உள்ளூராட்சி கட்டமைப்பு – ஊவா மாகாணம்

| பிரதேசம் | பிரதேச செயலகப் பிரிவுகள் | கிராம அலுவலர் பிரிவுகள் | மாநகர சபைகள் | நகர சபைகள் | பிரதேச சபைகள் |
|---|---|---|---|---|---|
| பதுளை | 15 | 567 | 2 | 1 | 15 |
| மொணராகலை | 11 | 319 | - | - | 10 |
| ஊவா | 26 | 886 | 2 | 1 | 25 |
| இலங்கை | 331 | 14,021 | 24 | 4 | 276 |

வாக்கெடுப்பு பிரிவுகள் மற்றும் வாக்கெடுப்பு மாவட்டங்கள் என்பன 2017 ஆம் ஆண்டின் போது பின்வருமாறு காணப்பட்டது. அட்டவணை 4.6.




அட்டவணை 4.6: தேர்தல் கட்டமைப்பு - 2017– ஊவா மாகாணம்

| பிரதேசம் | பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்கள் | வாக்கெடுப்பு பிரிவுகள் | வாக்கெடுப்பு மாவட்டங்கள் |
|---|---|---|---|
| பதுளை | 649,472 | 9 | 523 |
| மொணராகலை | 360,368 | 3 | 351 |
| ஊவா | 1,009,840 | 12 | 874 |
| இலங்கை | 15,760,867 | 160 | 12,521 |

### பதுளை மாவட்டம் பற்றிய தகவல்கள்

நாட்டின் மலையகத்தில் 2,861 சதுர கிலோ மீற்றர் பரப்பில் வியாபித்துள்ள பதுளை மாவட்டம் வட அகலாங்கு 6°32' மற்றும் 7°37' இற்கு இடையிலும் கிழக்கு நெட்டாங்கு 80°46' மற்றும் 81°15' இற்கு இடையிலும் அமைந்துள்ளது. மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பில் 2,861 சதுர கிலோ மீற்றர் இந்த மாவட்டத்திற்கு உரியதா கும். அது 33.7% ஆகும்.

இந்த மாவட்டம் 2,837 சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்பையும் 34 சதுர கிலோ மீற்றர் உள்ளக நீர்ப்பரப்பையும் கொண்டுள்ளது. உள்ளக நீர்ப்பரப்பு, மொத்தப் பரப்பில் 1.2% ஆகும். கிழக்கு மற்றும் தெற்கு திசைகளினால் மொனராகலை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களையும் வடக்கு திசையால் அம்பாறை மற்றும் கண்டி மாவட்டங்களையும் மேற்குத் திசையால் நுவரெலியா மற்றும் மாத்தளை ஆகிய மாவட்டங்களையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது.

2010 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் படி 688 சதுர கிலோ மீற்றர் அதாவது மொத்த நிலப்பரப்பில் 24% வனப் பிரதேசமாகக் காணப்பட்டது. இந்த மாவட்டம் கடல் மட்டத்திற்கு மேல் ஆகக் குறைந்தது 66 மீற்றர் தொடக்கம் உச்சமாக 2,320 மீற்றர் வரையில் நிலப் பரப்பு உயர்ந்து செல்கின்றது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராணுவ...

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"பொதுச் சொத்துக்கள் அல்லது தனிப்பட்ட சொத்துக்களுக்குச் சேதம் விளைவிப்பவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ள முப்படையினருக்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் என்ற ரீதியில் என்னால் அனுமதி வழங்கப்பட்டது. ஆனால், முப்படையினருக்கு உத்தரவிட எனக்கு அதிகாரம் இல்லை எனச் சிலர் கூறுகின்றனர்.

எனக்கு அதிகாரம் அதிகாரபூர்வமாக வழங்கப்பட்டுள்ளதால்தான் நான் அவ்வாறு உத்தரவிட்டேன்.

கொழும்பில் கூட்டத்துக்கு வந்தவர்கள் கோல்பேஸ் செல்வார்கள் எனப் புலனாய்வாளர்களுக்குத் தகவல் கிடைக்கவில்லை. அது தொடர்பில் விசாரணை நடத்தப்படுகின்றது.

இலங்கையில் இராணுவ ஆட்சி இடம்பெற்றதில்லை. ஒருமுறை அதற்கான முயற்சி இடம்பெற்றதாகக் கூறப்படுகின்றது. எனவே, இராணுவ ஆட்சி இங்கு இடம்பெறாது. அதற்கான சாத்தியமும் இல்லை" என்றார். (ம)

## சில தொழிற்...

இடம்பெற்ற அமைதிப் போராட்டத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாடு முழுவதும் தொழிற்சங்கங்கள் தொடர்ச்சியான வேலைநிறுத்தப் போராட்டத்தை ஆரம்பித்திருந்தன.

இந்நிலையில் பணிப் புறக்கணிப்பு இன்றுடன் நிறைவு பெறுகின்றது என சில தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளன.

இதேவேளை இலங்கை ஆசிரியர் சங்கம் தமது தொழிற்சங்க நடவடிக்கையை தொடரவுள்ளதாக அறிவித்துள்ளது. (ம)

## கொழும்பில் வீதி...

கொழும்பு நகரில் கண்காணிப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.(ம)

## சஜித்...

னைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் கருத்து வெளியிட்டுள்ள அவர்,

"இந்த நாட்டிற்கு விரைவில் அரசாங்கம் ஒன்று தேவை. இதை நாம் தாமதிக்க முடியாது.

ஐக்கிய மக்கள் சக்தி இதனை தாமதப்படுத்தினால், நான் சுயாதீனமாக இருக்க முடிவு செய்துள்ளேன். அத்தோடு, அரசாங்கத்தை அமைப்பதற்கான செயல்முறையையும் ஆதரிக்கிறேன்.

தேர்தலில் மக்கள் ஆணையுடன் ஆட்சியைக் கைப்பற்றுவது சிறந்ததுதான். ஆனால் அதற்கான நேரம் இதுவல்ல. இதை நாம் எவ்வளவு தாமதப்படுத்துகிறோமோ அந்த அளவுக்கு நாடு பாதிக்கப்படும்" என்றார். (ம)

## பிரதமராகிறார்...

தைத் தொடர்ந்து, இலங்கையின் பிரதமராக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்கவுள்ளதாக தகவல்கள் வெளியாகி வருகின்றன.

நாட்டில் ஏற்பட்டுள்ள அமைதியற்ற சூழலை அடுத்து இருவருக்குமிடையிலான திடீர் சந்திப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது.

கடந்த 2015ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் அப்போதைய அரச தலைவரான மகிந்த ராஜபக்ஷ முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்த பின்னரே தமது அதிகாரத்தை கைவிட்டு சொந்த ஊருக்கு திரும்பினார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ரணில் பிரதமராகப் பதிவியேற்கவுள்ளதாகவும், அதற்கான ஆதரவை கட்சிகளிடம் அவர் சார்ந்தவர்கள் கோரி வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (ம)

## ஒழிப்பதற்கு...

இதன்போது அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இந்த வாரத்திற்குள், பாராளுமன்றில் பெரும்பான்மையைக் கொண்டுள்ள, மக்களின் நம்பிக்கையை வென்ற ஒருவரை பிரதமராகவும் புதிய அமைச்சரவையையும் நியமிக்க முடிவு செய்துள்ளேன்.

மேலும், 19ஆவது திருத்தம் விரைவில் வலுப்படுத்தப்படும். நாடு வழமைக்கு மாறிய பின்னர் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

நாடளாவிய ரீதியில் வன்முறைச் சம்பவங்கள் ஏற்படுவதற்கு வழிகோலிய முதன்மையான சம்பவம் தொடர்பில் கட்சி சார்பின்றி நான் கடுமையான கண்டனத்தை தெரிவிக்கின்றேன்.

இந்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்கு பொலிஸ்மா அதிபருக்கு நான் அறிவுறுத்தியுள்ளேன். ஏதுவாக இருந்தாலும் அதன் பின்னர் இடம்பெற்ற ஆட்கொலை, தாக்குதல்கள், சொத்து அழிப்பு போன்ற மிலேச்சத்தனமான சம்பவங்களை நியாயப்படுத்த முடியாது.

இந்த சம்பவம் இடம்பெற்ற நேரத்தில் இருந்து பாதுகாப்பு செயலாளர், முப்படையினர், இராணுவ பிரதானி, பொலிஸ்மா அதிபர், புலனாய்வு பிரிவு பிரதானி உள்ளிட்ட பாதுகாப்பு சபை உறுப்பினர்களை தொடர்புபடுத்தி இந்த நாட்டை அமைதிப்படுத்த நடவடிக்கை எடுத்து வருகின்றேன்.

தற்போதிருக்கும் சூழ்நிலையை நிர்வகிப்பதற்கும் நாடு அராஜக நிலைக்கு செல்வதை தடுப்பதற்கும் தற்போது ஸ்தம்பிதம் அடைந்துள்ள அரசாங்கத்தின் செயற்பாடுகளை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்கும், புதிய அரசாங்கத்தை உருவாக்குவதற்கும் நான் நடவடிக்கை எடுப்பேன் என்றும் தெரிவித்துள்ளார். (ம)

## ஜனாதிபதி...

தயாராக இருக்கின்றோம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியிருப்பதாவது,

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகவேண்டும் என்பதே நாட்டின் பெரும்பான்மை மக்களின் கோரிக்கையாக இருக்கின்றது. அக்கோரிக்கையை ஜனாதிபதி நிறைவேற்ற வேண்டும். அதுவரையில் நாம் எந்தவொரு பொறுப்புக்களை ஏற்றுக்கொள்வதற்கும் தயாரில்லை. ஜனாதிபதியின் இராஜினாமாவைத் தொடர்ந்து நாட்டைப் பொறுப்பேற்றுக்கொண்டு, சரியான செயற்றிட்டத்தின் கீழ் மக்கள் எதிர்பார்க்கும் சுபீட்சத்தை உருவாக்குவதற்கு நாம் தயாராக இருக்கின்றோம்.

மகிந்த ராஜபக்ஷவின் அடக்குமுறைகள் காரணமாக பலர் பாதிக்கப்பட்டுள்ளனர். சுமார் 30 நாட்களுக்கும் அதிகமான காலம் அமைதியான முறையில் போராட்டங்களில் ஈடுபட்டுவந்தவர்கள்மீது வன்முறைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இதுகுறித்து பொலிஸ்மா அதிபர் வெளிப்படைத்தன்மையுடன் எவ்வித பக்கச்சார்புமின்றி விசாரணைகளை முன்னெடுக்க

## மீசாலை வடக்கில்

# படியிலிருந்து விழுந்த பெண் உயிரிழப்பு

(சாவகச்சேரி)

மீசாலை வடக்கில் படியிலிருந்து கீழே விழுந்த பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மீசாலை வடக்கு பகுதியில் கடந்த 8ஆம் திகதி வீட்டுப் படியால் ஏறிய தாயை மனநலம் பாதிக்கப்பட்ட மகன் தள்ளியதில் குறித்த பெண் கீழே விழுந்து படுகாயமடைந்திருந்தார்.

இந்நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த தாயார் நேற்று புதன்கிழமை அதிகாலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மீசாலை வடக்கு பகுதியைச் சேர்ந்த 62 வயதான தாயாரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-30)

## அனைவரின் சம்மதத்துடன்

# புதிய பிரதமரை நியமித்துவிட்டு ஜனாதிபதி பதவி விலக வேண்டும்

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா



(கொழும்பு)

நாட்டில் தற்போது நிலவும் அரசியல் ஸ்திரமற்ற நிலைக்கு ஒரேயொரு தீர்வு இருப்பதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

அதன் அடிப்படையில் அனைவரின் சம்மதத்துடன் ஒருவரை பிரதமராக நியமித்தது டன் ஜனாதிபதி உடனடியாக பதவி விலக வேண்டும் எனவும் ஆறு மாதங்களுக்குள் தேர்தலை நடத்த வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு காணொளி ஒன்றை வெளியிடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

கடந்த இரு நாட்களாக இடம்பெற்ற வன்முறை நாடு முழுவதும் பரவியது. குடிமக்களின் உரிமைகளை அமைதியாகக் கோரி வந்த இளைஞர்கள் குழு மீது அரச குண்டர்கள் கொடூரமான தாக்குதலை நடத்தினர். இந்த வன்முறை நாடு முழுவதும் மேலும் மேலும் பரவி வருகிறது. இந்த நிலை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

பாராளுமன்றத்திற்கு வெளியே அல்லது தேசியப் பட்டியலில் உள்ள அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய புதிய பிரதமரை நியமித்து ஜனாதிபதி பதவி விலக வேண்டும் வேறுவழியில்லை. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்கி நாட்டில் சட்டம் ஒழுங்கு உடனடியாக நிலைநாட்டப்பட வேண்டும். புதிய அரசாங்கம் அமைந்தவுடன் ஆறு மாதங்களில் தேர்தலுக்கு தயாராகுங்கள் என குறிப்பிட்டுள்ளார். (ம)

## மக்கள் தேவை...

வேண்டும். அதன்மூலம் இச்சம்பவத்துடன் தொடர்புடைய அனைவருக்கும் எதிராக உரிய சட்டநடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அதேவேளை தற்போதைய நிலைவரத்தை மேலும் கலவரமாக்குவதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கு இடமளிக்கவேண்டாம் என்று பொலிஸ்மா அதிபரிடமும் முப்படைகளின் தளபதிகளிடமும் கேட்டுக்கொள்கின்றேன்.

வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடைய அனைவரும் சட்டத்தின்முன் நிறுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார். (ம)

தானியும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா கேட்டுக்கொண்டுள்ளார்.

வன்முறையில் ஈடுபடுவோரைக் கட்டுப்படுத்த முப்படையினர் கடுமையான நடவடிக்கைகளை எடுக்க நேரிடும் என்றும் இராணுவத் தளபதி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

"நாட்டையும் மக்களையும் பொதுச் சொத்துக்களையும் பாதுகாக்கும் இராணுவத்தின் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பை வழங்குங்கள். வீடுகளில் இருங்கள். தேவையற்ற வகையில் வெளியில் வர வேண்டாம்" என்றும் இராணுவத் தளபதி ஊடகங்களிடம் நேற்று மேலும் தெரிவித்துள்ளார். (ம)

## பிரதமர் பதவிக்காக

# மூவரின் பெயர்கள் மைத்திரியால் பரிந்துரை

(கொழும்பு)

பிரதமர் பதவிக்கு மூவரின் பெயர்களை பரிந்துரைத்து 11 கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் சுயாதீன குழு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு கடிதமொன்றினை அனுப்பி வைத்துள்ளன.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன நேற்றைய தினம் இடம்பெற்ற கட்சித்தலைவர்களின் கூட்டத்தின் பின்னர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது, டலஸ் அலகப்பெரும, விஜயதாஸ ராஜபக்ஷ, நிமல் சிறிபால டி சில்வா ஆகியோரின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும்பான்மையை நிரூபிப்போர் அரசமைக்க அழைக்கப்படுவார்கள்

## இந்த வாரத்துக்குள் புதிய பிரதமர்; விசேட உரையில் ஜனாதிபதி கோட்டா

இந்த வாரத்துக்குள் புதிய பிரதமர் பதவியேற்பார் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிப்போர் அரசமைக்க அழைக்கபடுவார்கள் எனவும் அவர் கூறினார்.

நாட்டு மக்களுக்கு நேற்று ஆற்றிய விசேட உரையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மே மாதம் 9ஆம் திகதி காலிமுகத்திடல் வன்முறை மற்றும் கடந்த சில நாட்களாக முன்னெடுக்கப்பட்ட வன்முறைச் செயல்களை யாராலும் நியாயப்படுத்த முடியாது என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

வன்முறைச் செயல்களில் ஈடுபடும் அனைத்து நபர்களுக்கும் எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட நபர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளதாக ஜனாதிபதி தெரிவித்தார். (ம)

# பாதுகாப்பு, நிதி உட்பட மூன்று அமைச்சுக்களின் செயலாளர்கள்

## ஜனாதிபதி கோட்டாவால் நியமனம்

முன்னாள் பாதுகாப்பு, நிதி மற்றும் பொது மக்கள் பாதுகாப்பு ஆகிய அமைச்சுக்களின் செயலாளர்களை மீண்டும் அதே பதவிகளுக்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நியமித்துள்ளார்.

பிரதமர் பதவி விலகியதன் பின்னர், அமைச்சரவை கலைவதால் அமைச்சுக்களின் செயலாளர்களின் பதவிகளும் செயலிழக்கும்.

இந்தநிலையில், நாட்டின் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்காக குறித்த 3 அமைச்சுக்களின் செயலாளர்களையும் தொடர்ந்தும் தக்க வைக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதன்படி, பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக ஓய்வு பெற்ற மேஜர் கமல் குணரத்னவும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் ஜகத் டி அல்விஸும் நிதியமைச்சின் செயலாளராக மஹிந்த சிறிவர்த்தனவும் தொடர்ந்தும்செயற்படவுள்ளனர். (ம)


2021 O/L

மாணவர்களுக்கான இறுதிக் கருத்தரங்கு

வரலாறு

ஆசிரியர் RS. சந்திரன்

காலம்: மே 14, 15 சனி, ஞாயிற்றுக்கிழமை (காலை 8.00 மணி முதல் 1.00 வரை)

குறிப்புகள் :
- ஆர்வமுள்ள வெளிமாணவர்கள் கலந்துகொள்ள முடியும்.
- எதிர்பார்க்கை வினாக்கள் விடைகளுடன் கையேடுகளாக வழங்கப்படும்.
- இலங்கைப்படம், உலகப்படம் இலகுவான முறையில் குறித்துக் காட்டப்படும்.
- சுகாதார விதிமுறைகளை பின்பற்றி மாணவர்கள் கலந்து கொள்ளவும்.
- கட்டணத்தைச் செலுத்தி கருத்தரங்கில் பங்கு பற்ற முடியும்.

றோயல் அக்கடமி

அரசடி வீதி, யாழ்ப்பாணம்.

(11343) T.P: 0776649134 நிர்வாகம்



காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழியில் 18 பரப்புக்காணி
2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
விற்பனைக்கு உண்டு. (நிலப்பரப்பு)

- A9 வீதியில் இருந்து 150m தூரம்
- லேடன் கொம்பனி பின்புறம்
- நாவற்குழி சந்தியில் இருந்து 500m தூரம்
- நல்ல தண்ணீர் ஊற்று நிலம்
- நல்ல சூழல்
- 20 அடிப் பாதையுடன்

முன்பகுதியாக உள்ள காணி
1 பரப்பு - 7 இலட்சம்

பின்பகுதியாக உள்ள காணி
1 பரப்பு - 5 இலட்சம்

(11344)

077 658 5999, 074 043 6673


# தென், மேல், கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கு இன்று விடுமுறை

(கொழும்பு)

தென் மாகாண, கிழக்கு மாகாண மற்றும் மேல் மாகாணத்தில் உள்ள அனைத்து அரச பாடசாலைகளுக்கும் இன்று விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. (ம)


உள்ளூர் உற்பத்திப் பொருட்களின் கொள்வனவு மற்றும் சந்தைப்படுத்தல்



தொடர்புகளுக்கு
0777-068-777

(C-4313)


# மரண அறிவித்தல்



பிறப்பு 16 - 01 - 1936

இறப்பு 10 - 05 - 2022

## திரு. சோமசுந்தரம் சரவணபவன்

மண்டைதீவு 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் இல. 8, திருவையாறை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திரு. சோமசுந்தரம் சரவணபவன் அவர்கள் நேற்று முன்தினம் (10.05.2022) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - யோகம்மா தம்பதியரின் அன்புப் புதல்வரும் காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம் - அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற யோகாம்பிகை அவர்களின் அன்புக் கணவரும் மோகனபவன் (திட்டமிடல் பணிப்பாளர் - சுகாதார அமைச்சு, வ.மா, முன்னாள் திட்டமிடல் பணிப்பாளர் - மாவட்டச் செயலகம், கிளிநொச்சி), இராஜபவன் (சாரதி -மாவட்டச் செயலகம், கிளிநொச்சி), விஜிதா (ஆசிரியர், கிளி/ திருவையாறு மகா வித்தியாலயம்), காலஞ்சென்ற தேவமாலினி ஆகியோரின் அன்புத் தந்தையும் சுபாசினி, செல்வறஞ்சினி (ஆசிரியர்- கிளி/ புனித திரேசா பெண்கள் கல்லூரி), விக்னேஸ்வரன் (கூட்டுறவுத் திணைக்களம் - கிளிநொச்சி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் கிளிநொச்சி மகா வித்தியாலய மாணவர்களான தமிழ்நிலவன், தரணிகன், திகழினியன், பவஜிதன், பவனுயா, மதுரிகா, அபினயா, சுரபிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக் கிரியைகள் இன்று (12.05.2022) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் முதலாம் ஒழுங்கை வில்சன் வீதி, திருவையாறில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தீயுடன் சங்கமமாக திருநகர் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.. (11346)

இல. 08, 1ஆம் ஒழுங்கை, வில்சன் வீதி, திருவையாறு.

தகவல் :- குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



பிறப்பு 17 . 02 . 1944

இறப்பு 10 . 05 . 2022

## ஏகாம்பரம் மல்லிகாதேவி

கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் உயரப்புலம் ஆனைக் கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட ஏகாம்பரம் மல்லிகாதேவி அவர்கள் கடந்த 10.05.2022 (செவ்வாய்க்கிழமை) அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை - தங்கரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற ஐயாத்துரை ஏகாம்பரம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற இரத்தினசிங்கம், சிவபாலசிங்கம், ஜெயபாலசிங்கம், குணதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் கலாரஞ்சினி(ஜேர்மனி), இந்திராதேவி(ஜேர்மனி), சசிகலா, நாகரூபன் (பிரான்ஸ்), சிவகௌரி(பிரான்ஸ்), நுஜாந்தன்(பிரான்ஸ்), காலஞ்சென்ற சிவகுமாரி ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற நந்தகுமார், காலஞ்சென்ற குணபாலன், மகேந்திரராஜா, ரம்மியா, மகாலிங்கம், சிந்து ஆகியோரின் அன்பு மாமியாரும் நந்தினி, எழிலன், பபிந்திரன், பபித்தா, சிந்துஜன், திலக்ஷன், திலக்ஷனா, அக்ஷயன், ஆதவி, தரிசானன், திவ்யாசினி, தருணிகா, சஸ்வின், றகிசன், றுகிசன், ஜெறேமிகா, திபிசன், கபிசன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் நந்தனா, அமிலநிலா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (12.05.2022) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு வராகி அம்மன் கோவிலடி உயரப்புலம் ஆனைக்கோட்டையில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கறையான்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (11347)

வராகி அம்மன் கோவிலடி, உயரப்புலம், ஆனைக்கோட்டை. 075 289 5038

தகவல்: பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.05.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.